விலை ரூபா 5.00 பக்கங்கள் பத்து **Registered as a News paper in Srilanka**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


# வலம்புரி
# VALAMPURI

மல்லிகா மிக்சர் மாளிகை
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீபீஸ்
ரேஸ்ரி ரைற்ரானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 4 வியாழக்கிழமை (17.01.2002) தொலைபேசி 3378 ஒலி 28

# சமாதானப்பேச்சை அரசு விரும்பினால் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்

## இந்திய அரசும் தனது முடிவை பரிசீலிப்பது அவசியம்
## பத்திரிகையாளர் மத்தியில் சு.ப. தமிழ்ச்செல்வன்



(வவுனியா நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சமாதானப் பேச்சுவாரத்தைகளை ஆரம்பிக்கப்படுவ தற்கு முன்னர் தமிழீழவிடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்றும், மல்லாவியில் உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் அவர்களின் தேவைகள் என்பவற்றை அறியும் நோக்கோடு அங்கு சென்ற சர்வதேச, உள்ளூர் பத்திரிகையாளர்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மல[illegible] யில் வைத்து சந்தித்துப் பே[illegible]

பத்திரிகையாளருடனான [illegible]ப் பின்போது சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில்

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையை அரசு ஆரம்பிக்க வேண்டுமானால் தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரமும் மேம்படுத்தப்பட வேண்டும் (2ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடையை நீக்குவது குறித்து அரசு இன்னமும் முடிவு எடுக்கவில்லை
### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானத்துக்கான பாதையை படிப்படியாக சரியான அணுகு முறையில் முன்னெடுத்து செல்வதே அரசாங்கத்தின் நோக்க மாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று மல்லாவியில் நடத்திய செய்தியாளர் மாநாடு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கம் நீக்கியுள்ள பொருளாதாரத்தடை காரணமாக வன்னிப்பிரதேசத்திலுள்ள மக்கள் பயனடைந்துள் ளனர்.

புலிகள் மீதான தடையை நீக்குவதுபற்றி அரசு எவ்வித முடிவையும் இதுவரை எடுக்கவில்லை புலிகளும் இதுபற்றி அரசுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை தற்போது அரசாங்கத்தின் முழுக் கவனமும் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவையை ஓரளவுக்காவது பூர்த்திசெய்வதாகும். இதன் பின்னரே ஏனைய விடயங்கள் குறித்து ஆராயப்படும் என்று அவர் தெரிவித்தார் (ந4)

## அமைச்சர் மொரகொட விரைவில் ஒஸ்லோபயணம்
## ஒரு வருடத்திற்கு யுத்தநிறுத்தத்தை

## வன்னிக்கு உணவு அனுப்பும் நிகழ்வு
## தமிழ் எம்.பிக்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை

(வவுனியா)

இராணுவகட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திற்கு மூன்று அமைச்சர்களின் கண்காணிப்பில் உணவு, தடைநீக்கிய பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட வைபவத்தில் வன்னி மாவட்ட தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

வன்னிக்கு உணவுப்பொருட்கள் அனுப்பிவைக்கவேண்டும் என்று தேர்தல் காலங்களில் கூக்குரலிட்டவர்கள் உணவுஅனுப்பும் வைபவத்தில் கலந்துகொள்ளாதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதேவேளை அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையில் வவுனியா மாவட்டசெயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டிலும் தமிழ்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

## வடமராட்சிப் பகுதிக்கு 1000தொலைபேசி இணைப்பு
### பரிவர்த்தனை சாதனம் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப்பகுதிக்கான தொலைத்தொடர்பு வசதிகளை வழங்குவதற்கு தேவையான பரிவர்த்தனைச்சாதனம் கொழும்பிலிருந்து யாழ் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளது இப்பரிவர்த்தனை சாதனத்தின் மூலம் வடமராட்சிப்பகுதியில் 1000 தொலைபேசி இணைப்புக்களை வழங்க முடியுமெனவும் இதற்குத்தேவையான கேபிள்கள் விரைவில் வந்துசேரும் எனவும் யாழ் தொலைத்தொடர்பு நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (ந)

## ஏ.எல் விடைத்தாள் மதிப்பீடு யாழ்ப்பாணத்தில் நடக்கும்?
### பரீட்சை ஆணையாளர் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப்பரீட்சைத்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.ஆர்.எம்.அமரக்கோன் நேற்றய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தார் இவருடன் பரீட்சைத்திணைக்கள [illegible] கல்விப்பணிமனைக்கு விஜயம் செய்து ஐந்து வலயங்களைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களுடன் கலந்துரையாடலை நடத்தினர்.

கலந்துரையாடலின் போது க.

இலங்கைப்பரீட்சைத்திணைக்க ளத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.ஆர்.எம்.அமரக்கோன் நேற்றய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தார் இவருடன் பரீட்சைத்திணைக்கள உதவி ஆணையாளர் போல் அன்ரனியும் வருகைதந்துள்ளார். இவர்கள் நேற்றுக்காலை யாழ் வலயக் கல்விப்பணிமனைக்கு விஜயம் செய்து ஐந்து வலயங்களைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களுடன் கலந்துரையாடலை நடத்தினர்.

கலந்துரையாடலின் போது க.பொ.த உயர்தரப்பரீட்சை விடைத்தாள்களை யாழ்ப்பாணத்தில் மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது (ந)

# ஒரு வருடத்திற்கு யுத்தநிறுத்தத்தை நீடிப்பதற்கு அரசு விருப்பம்!

(கொழும்பு)

யுத்தநிறுத்தத்தை ஒரு வருடத்திற்கு நீடிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது எதிர்வரும் 24ம் திகதியுடன் முடிவடையும் ஒரு மாதகால யுத்தநிறுத்தத்தை தொடர்ந்து ஒரு வருடத்திற்கான யுத்த நிறுத்தமாக நீடிக்கும் அறிவிப்பு அடுத்தவாரம் வெளிவரலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப்புலிகளும் இதற்கு அனுசரணையாக செயற்படுவதற்கு உடன்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சமாதானப்பேச்சுக்களுக்கான ஆயத்தங்களை ஈடுபடுவதற்கான அமைச்சர் மலிந்தமொரகொட விரைவில் பிரதமரின் விசேட தூதுவராக ஒஸ்லோ செல்லவிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சுக்களை ஒஸ்லோவில் வைத்துக்கொள்ளும் வாய்ப்புக்கள் பற்றி அமைச்சர் மலிந்தமொரகொட பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்இந்தியா, காட்மண்டு, மடு ஆகியஇடங்களில் பேச்சுக்களை வைத்துக் கொள்வது என்று ஆராயப்படும்

இது இவ்வாறிருக்க அரசாங்கம் அமைத்துள்ள சமாதானசெயலகம்

(10ம் பக்கம் பார்க்க)

## இன்று பொங்குதமிழ்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு இன்று யாழ்பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறும். கடந்தவருடம் இதேதினத்தில் யாழ் பல்கலைக் கழக சமூகத்தால் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டதும் அதனைத் தொடர்ந்து

(10ம் பக்கம் பார்க்க)



யாழ்.மாநகர முதல்வராக செல்லன் கந்தையன் நேற்றுப் பதவி ஏற்பதையும், கூட்டணியின்உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஆணையாளர் இ.இராமலிங்கம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்:கோபி)

### கேணல் கிட்டுவின்

# 9வது ஆண்டு நினைவு வன்னியில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

1993ம் ஆண்டு சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டவேளை குண்டைவெடிக்கவைத்து வீரச்சாவெய்திய விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 9வது ஆண்டு நினைவுதினம் நேற்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வு மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், இராணுவ புலனாய்வுப்பொறுப்பாளர் ரமணன், அரசியல்துறைப் பொறுப்பாளர் துரை இராணுவ, மகளிர் புலனாய்வுப் பொறுப்பாளர் கல்பனா உட்பட போராளிகள் பொதுமக்கள், என பலரும் கலந்துகொண்டனர். (ந4)

# அரசு - புலிகள் பேச்சுக்கு இந்தியா இடமளிக்கவேண்டும்

## கூட்டணி சிவா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இடையில் நோர்வேயின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ள சமாதானப்பேச்சு வார்த்தை தமிழகத்தில் நடைபெறுவதற்கு இந்தியா அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இவ்விடயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளபோதும் இது தொடர்பாக புதுடில்லி அரசு முறைப்படியோ, திடமாகவோ மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை இந்நிலையில் இதனை இந்தியா மறுக்குமானால் அது துரதிஸ்டவசமானதாகும்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

**கலண்டர்**

ஆனந்தா கிழமைக் கலண்டர் மேசையில் வைக்கக் கூடிய ஸ்ராண்டுடன் ரூபா 45/- மட்டுமே படத்துடன் இணைத்து சுவரில் மாட்டக் கூடியதாகவும் அமைக்கலாம் அன்பளிப்புக்கு உகந்தது விசேட கழிவு தரப்படும். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொ.பே. 2820.

(சி-3274)


## சமுகமளிக்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் மாதம் தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை எதிர் வரும் 20ஆம் திகதி மு.ப 10மணிக்கு யாழ் இந்துக்கல் லூரி நிலையத்திற்கு சமுக மளிக்குமாறு சிரேஷ்ட விரி வுரையாளர் திருமதி த. வில்வநாதன் அறிவித்துள் ளார் (எ)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணப்)

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் வருடாந் தப் பொதுக்கூட்டமும் நிர் வாக சபைத் தெரிவும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு பழைய நூலகக் கட்டடத்தில் இடம்பெறவுள் ளது. (உ-19)

# தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு கிடைக்காவிடில் தனி நாட்டை அமைப்பதே இறுதி முடிவாகும்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கருத்து

இலங்கை அரசு இராணுவ இயந்திரத்தின் அடக்குமுறை யினுள் நீண்டகாலமாக அடி மைப்பட்டிருந்த தமிழினம் கடந்த ஆண்டு ஜனவரிமாதம் 17ஆம் நாள் - நீண்டகாலத் தின் பின் மீண்டுமொருமுறை அரச அடக்குமுறைகளை உடைத்துக்கொண்டு எமது உரிமைக்காக ஜனநாயக ரீதி யில் குரல் கொடுக்க ஒன்று திரண்ட வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த எழுச்சி நிகழ்வே பொங்குதமிழ். இந் நாள தமிழ்மக்களாகிய உண் மையான அபிலாசை என்ன என்பதை உலகின் காதுகளில் ஓங்கி அறைந்தநாள். சீருடை தரித்த கொலை காரர்களா லும். கொலைக்கருவிகளா லும் தமிழ்மக்களின் உணர்வு களின் உத்வேகத்தை தடுத்து விடமுடியாதென்பதை நிரூ பித்துக்காட்டிய நாள். குடா நாட்டைச் சந்திரிகாவின் படைகள் ஆக்கிரமித்த பின் மரண பயத்தில் உறைந்து போயிருந்த விடுதலை உணர்வுகளுக்கு மீண்டும்புதிய இரத்தம்பாய்ச்சி புதுப்பொலி வூட்டிய நாள். அற்ப சொற்ப சலுகைகளைக்காட்டி தமிழ் மக்களின் தன்மான உணர் வினை விலைபேசிவிடமுடியா தென்பதனை பேரினவாதிக ளும் அதன் அடிவருடிகளும் நன்றாக உணர்ந்து ஏமாந்து போன நாள்.

அடிமைப்பட்டிருந்த மக்கள் வீறுகொண்டெழுந்து ஒரே குரலில் எமது அபிலாசை களையும் அடக்குமுறைகளை யும்எமதுஉணர்வுகளை அன்று வரை புரிந்திராத உலகத்த வருக்கு தெளிவாக எடுத்தி யம்பிய இப் பொங்கு தமிழ் நிகழ்வை உருக்கொடுத்து நெறிப்படுத்திய வர்கள் யாழ் பல்கலைக் கழக சமூகத்தவர்கள் எம்மோடு இந்த குடாநாட்டு திறந்த வெளிச்சிறைச்சாலையில் அடி மைகளாக வாழும் எமது அன் பிற்குரிய மக்களே அதற்கு உயிர் கொடுத்தவர்கள். இலங் கை அரசின் திட்டமிட்ட இனஅழிப்பு செயன்முறை யினால் பலியாகிக் கொண்டிருக்கும் எம்மை யும் எமது உரிமைகளையும் மீட்பதற்காக தமிழீழ விடுத லைப் புலிகள் ஆயுதம் தாங் கிப் போராடி வருகின்ற அதேவேளை அடக்கு முறைக் குள் வாழும் நாமும் எமது உரிமைக்காகக் குரல்கொடுக்க வேண்டியவரலாற்றுத் தேவை உண்டு.

எமது உரிமைக்கான முயற்சி களும் சாத்வீகமான போரா ட்டங்களும் அரச வன்முறை மூலம்மிகக் கொடூரமாக ஒடுக் கப்பட்டது.

1970 களில் தமிழ்மக்களின் உரிமைகளை சாத்வீகமான முறையில் பெற்றுக்கொள்ள முடியாது என்பது உறுதியாக உணரப்பட்டபொழுது அன் றைய தமிழ்இளைஞர்களால் சிங்கள பேரினவாத அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட் டம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் மீதான வன் முறைகள் பூதாகரமாக உரு ப்பெற்ற அதேவேளை வன் முறைக்கு எதிரான தமிழ்மக் களின்உணர்வலைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் இனவிடு தலைக்கானஆயுதப்போராட் டத்தில் பலபரிமாணமுன்னே ற்றங்களை ஏற்படுத்தியது புலிகளின் போர்வலு தமிழ் மக்கள் மீது சிங்கள பேரின வாத அரசாங்கங்கள் திட்ட மிட்ட இன ஒடுக்கு முறைக ளை பாரியளவில் கட்டவிழ் த்து விடமுடியாத ஓர் நிலை யை ஏற்படுத்தியது.

புதிய அரசும் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஓர் ஆரோக்கியமான தீர்வை ஏற்படுத்தப் போவதாக மக் களுக்கு நம்பிக்கையை ஏற் படுத்தி ஆட்சிபீடம் ஏறியயுள் ளது. பேச்சுக்கு முன்பதாக இயல்புநிலை ஏற்படுத்தப் பட்டு புலிகள் மீதான தடை கள் நீக்கப்பட்டு பேச்சுக் கான உகந்த சூழ்நிலை உடன் உருவாக்கப்படுமென புதிய அரசு உறுதியளித்திருந் தது. ஆனால் அன்றாடப் பிரச்சினைகளே இன்னும் தீர்த்துவைக்கப்படவில்லை. புலிகள் மீதான தடை நீக் கப்படவில்லை. அரசின் முக் கிய அமைச்சுப் பொறுப்பில் உள்ளவர்கள் பேச்சு மூல மான தீர்வுக்கு முரணான கருத்துக்களைதெரிவித்து வரு கின்றனர்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலா சையை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு சரியான தீர்வு பேச்சுமூலம் எட்டப்பட வில்லை எனில் தமிழ் மக் கள் தனிநாடு ஒன்றினை அமைத்து பிரிந்து வாழ்வதே இறுதி உபாயமாக அமையும். அடுத்து வருகின்ற ஆண்டில் போரா? சமாதானமா? இலங் கையில் நிலவப்போகிறது. என்பதை அரசு முன்வைக் கப்போகும் தீர்வே நிர்ண யிக்கப்போகிறது. பேச்சு வார்த்தை முடிவடைந்து நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்குமேயானால் அது ஏற்படுத்தப்போகும் விளைவு களை இலங்கையரசு ஜீரணித் துப் பார்க்க முடியாததாக அமையும்.

எனவே இன்றைய தினத் தில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் மூலம் புதிய அர சிற்கு நாம் கூறவிரும்புகின்ற ஒருமித்த கருத்து என்ன வெனில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை உடனடியாகச் சீர்செய்து ஒரு இயல்பு நிலையினை ஏற்படுத்தி புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த் தையினை கௌரவமான முறையிலே புலிகளுடன் மட் டும் மேற்கொள்ள வேண்டும். கௌரவமான பேச்சுவார்த் தையினூடாக எமது சுயநிர் ணய உரிமை அங்கீகரிக்கப் பட்டு எமது தாயகபூமியில் ஒரு தனித்தேசிய இனமாக வாழச்கூடிய ஒரு தீர்வு எட் டப்படவேண்டும். இதுவே இன்றைய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் எமது ஒரு மித்த குரலாகும். (ந)

## பொலிஸ் குற்றத் தடுப்பு பணியகம் மீண்டும்இயங்கும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன் னணி அரசின்காலத்தில்கலை க்கப்பட்ட பொலிஸ் குற்றத் தடுப்புப் பணியம் மீண்டும் இயங்கவுள்ளது

கடந்தகாலங்களில் இப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பணியகத்தில் இடம் பெற்ற பல்வேறு ஒழுங்கீனங்களை அடுத்து கடந்த ஆட்சியின் போது இப்பணியகம் கலைக் கப்பட்டது.

நற்போது நாட்டில் அதிக ரித்துவரும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு குற்றத்தடு ப்புப்பணியகம் மீண்டும் செய ற்படவேண்டியதன் அவசியத் தை சிரேஷ்ட பொலிஸ் அதி காரிகள்வலியுறுத்தியுள்ளதன் பேரிலேயே அதனை மீண்டும் இயக்குவதற்கு புதிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (வ)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். மாவட்ட சிறுவர் கழகங்களின் இணையத் தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டில்வெற்றி யீட்டிய இலக்கங்கள் வருமாறு;

1ம் இடம் - 0127
2ம் இடம் - 0628
3ம் இடம் - 0668

இவர்களுக்கான பரிசில்களை சிறுவர்களுக்கான. இணையச் செயலாளரிடம் 25ம் திகதிக்கு முன் பெற் றுக் கொள்ளவும்.

(கி-3288) - இணையச் செயலாளர்


## சமாதானப்

அண்மையில்நடந்துமுடிந்த தேர்தல் முடிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் திருப்தி தருவதாக இருந்தது டன், விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசும் மோதல் தவிர்ப்பை உடனடியாக அறிவித்திருந்த மை வரவேற்கத்தக்கதாகும்.

கடந்த தேர்தலில் அரசு ஈட்டிய பாரியவெற்றியானது சமாதானத்தை முன்னெடுத் துச் செல்வதற்குமக்கள்வழங் கிய ஆணை என்பதை அரசு ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

இந் நிலையில் அரசு மேற் கொள்ளவிருக்கும் எந்த வொரு பேச்சுவார்த்தையாயி னும் அதற்கு தமிழீழ விடுத லைப் புலிகள் மீதான தடை நீக்கப் படுவது அவசியமாகும் என்றும் கூறினார்.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கான தளமாக இந்தியாவைப்பாவிப் பதற்கு அனுமதி மறுக்கும் தனது முடிவை இந்தியா மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

(வ)


## SUBRA (14) கல்வி நிறுவனத்தின் வாழ்த்து

தென்னிந்திய திருச்சபை பேராயர்
**அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன்**
அடிகளாருக்கு பேரறிஞர் விருது கிடைத்ததை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

நிறுவன இயக்குநர்
**சதாசிவம் ஐங்கரன்**
**ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்**

(கி-3284)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை பிரிவுகளின் பொதுக் கூட்டமும் தேர்தலும் - 2002

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையக செயலாளர் நாயகம் அவர்களின் அறி வுறுத்தலுக்கு அமைவாக பிரிவுகளின் பொதுக்கூட்ட மும், தேர்தலும் பின்வருமாறு நடைமுறைப்படுத்துவ தென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பழைய துரித அங்கத்தவர்களும், புதிதாக இணையவுள்ள துரித அங்கத்தவர்களும், இணை (SUPPORTING) அங்கத்தவர்களும் அவ்வப்பிரிவுக ளில் பணம் செலுத்தும் இறுதித்திகதி 20-01-2002 (பி. பகல் 4.00 மணி) (குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் இணைந்துகொள்ளாதோர் பிரிவுப் பொதுக்கூட்டத்திலும், நேர்தலிலும் பங்கு பற்ற உரித்துடையவரல்லர்.)

பிரிவுகளில் நியமனப்பத்திரங்கள் வழங்கல்.
05-02-2002 - 09-02-2002
(மு. பகல் - 9.00 மணி பி.ப. 4.00)

(ஒரு நியமனப்பத்திரம் ரூ. 100/- செலுத்தி பெற் றுக்கொள்ளலாம்)

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல்
11-02-2002 (மு. ப. 9-00 பி. ப. 2:00)

பிரிவுப் பொதுக் கூட்டமும், தேர்தலும்
நடைபெறும் திகதி 03-03-2002

அங்கத்தவர் இணைத்தல் சம்பந்தமாக எம்மால் வெளியிடப்பட்ட 2002-01-11ம் திகதிய பத்திரிகை விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. இவ் வறிவித்தலை பொதுக்கூட்டத்துக்கான முன்னறிவித்த லாக ஏற்றுக்கொள்வதுடன் மேலதிக விபரங்களை அவ்வப்பிரிவுகளில் பெற்றுக் கொள்ளும்படியும்கேட்டுக் கொள்கின்றோம்.

செஞ்சிலுவைச் சேவையில்
**கௌரவ செயலாளர்**

2002-01-16. (C 3290)



## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2002

மேற்படி விடயம் தொடர்பாக 25-12-2001ம் திகதியவலம்புரிப்பத்திரிகையில் இடம்பெற்ற விண்ணப் பத்தின் முடிவுத் திகதி 31-01-2002 வரை நீடிக்கப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**க. கமலசேகரம்,** (ஜே.பி.யு.எம்)
தலைவர்
வலிதெற்கு பிரதேசசபை
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
சுன்னாகம்,
2002.01.15. (கி-3283)

### இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில்

# நோர்வேயின் தலையீட்டால் நன்மையடையப்போவது புலிகளே

## சிஹல உறுமய கொதிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர்எரிக்சோல்ஹெய்மை எமது பிரச்சினையில் தலையிடச் செய்து நாட்டைக்கூறு போடும் திட்டத்திற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு துணை போவதாக சிஹல உறுமய குற்றஞ்சாட்டி உள்ளது.

எமது நாட்டின் பிரச்சினையை நாமே நன்றாகப் புரிந்து வைத்துள்ளோம். எனவே எங்கள் மத்தியிலேயே இதற்குத் தீர்வு உள்ளது. இந்த நிலையில் நோர்வே இனத்தவரால் இலங்கையில் எவ்வாறு சமாதானத்தை ஏற்படுத்தமுடியம் என்று அக்கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

அத்துடன் பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைக்கு 'ஒஸ்லோ' உடன்படிக்கை மூலம் சாதனை ஏற்பாட்டாளர்களாக இருந்தவர்களும் நோர்வேக்காரர்கள் தான்.

ஆனால் அங்கும் சமாதானம் ஏற்படவில்லை. தொடர்ந்தும் யுத்தம் கோரத் தாண்டவமாடுகிறது.

இந்த நிலையில், இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடுலதன் மூலம் நன்மையடையப் போவது விடுதலைப்புலிகளே.

எனவே எமது பிரச்சினையில் தலையிட்டு நாடு துண்டாடப்படுமாயின் அதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசே பொறுப்பேற்க வேண்டுமென கட்சியின் தலைவர் திலக்கருணாரட்ண தெரிவித்துள்ளார். (உ-5)

### வன்னியில் கடமையாற்ற

# 500 மருத்துவ தாதிகளை சேர்த்துக் கொள்ள முடிவு

(கொழும்பு)

இராணுவக்கட்டுப்பாட்டற்ற வன்னிப் பிரதேசங்களில் கடமையாற்றவென 500 மருத்துவத் தாதிகளை, அரசாங்க மருத்துவ சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு சுகாதார போஷாக்கு நலன்புரித்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

இப்பிரதேசத்தில் கடமையாற்ற விரும்புபவர்கள் தங்கள் பிரதேசங்களிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனைகளில் விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-8)

# வடபகுதி முஸ்லிம்களை மீளக் குடியேற்ற வேண்டும்

## டக்ளஸ் எம்.பி கடிதம்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும்பாதுகாப்பாக தத்தம் சொந்த இடங்களுக்கு திரும்புவதை உறுதிப்படுத்த வேண்டும் இது தொடர்பாக மேற்கொளளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் எமது மனப்பூர்வமான ஆதரவும் ஒத்துழைப்பும் எப்போதும் இருந்து வரும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே. என் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் நூர்தீன் மன்சூருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார் அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திற்காகவேசெயற்பட்டு வருகின்ற நாம் முஸ்லிம் மக்களை சகோதரர்களாகவே எப்போதும் கருதுகின்றோம். தமிழ் பேசும் மக்கள் மத்தியிலான ஐக்கியம் என்பது முஸ்லிம் மக்களை புறம் தள்ளுவதாகவோ புறக்கணிப்பதாகவோ இருக்க முடியாது அவ்வாறு அமையவும் கூடாது இதனைத் தெளிவாகவும் உறுதியாகவும் கடந்த காலங்களிலும் நாம் வெளிப்படுத்தி வந்திருக்கின்றோம்.

அரசாங்கத்துடன் புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்ற இந்தசந்தர்ப்பம் வட பகுதியிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாணம் மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர நல்ல தருணமாக விளங்குகின்றது.. ஆதலினால்அரசாங்கம் புலிகளோடு செய்துகொள்ளவிருப்பதாகக் கூறப்படும் புரிந்துணர்வு உடன்பாட்டில் இந்த மக்களுடைய விடயங்களும் உள்ளடக்கப்படுவது பொருத்தமானதாகும். இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களது கவனத்திற்கும் எம்மால் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ந)

### வடக்கு - கிழக்கில்

# ஒரு இலட்சத்திற்கும் அதிக மாணவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் அண்மைக்காலம் வரை இடம் பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசு சார்பற்ற அமைப்பு ஒன்று நடத்திய ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

150 இற்கும் மேலானபாடசாலைகளில் படையினர் முகாமிட்டுள்ளனர்.

இலவசக்கல்வி என்று கூறப்பட்டாலும் பொருட்கள். சேவைகள் கொள்வனவுசெய்வதற்காக பல்வேறு வழிகளிலும் மாணவர்களிடம்இருந்து பணம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

இதனால் ஏழ்மையில் வாழும் பெற்றோர் தமது பிள்ளைகளின் பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து நலனோம்பு நிலையங்களில் சேர்த்து வருகின்றனர் என்று அவ் அறியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையின் அனைத்து விபரங்களும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (உ-8)

# இராசி பலன்

17 - 01- 2002

(தை4 வியாழன்)

சதுர்த்தி பி.இ 1.49வரை
சதயம் மு.இ 10.38 வரை
ராகுகாலம்- 2.05- 3.35
சுபநேரம் 8. 05- 9. 35
சதுர்த்தி விரதம்

**மேடம்**

வரவேற்கப் படுதல், காரிய அனுகூலம், தொழில்வெற்றி, குடும்பநிகழ்ச்சி.

**இடபம்**

தொழில் மேன்மை, உற்சாகம், முயற்சி கைகூடும், நிலை மாற்றம்.

**மிதுனம்**

வேலைப்பழு, அச்சமான நிலை, வயிறறுக் கோளாறு, காரிய தாமதம்.

**கடகம்**

உறவினர் மனஸ்தாபம், போசனசுகம், வியாதி, முயற்சி தடங்கல்.

**சிங்கம்**

சென்ற இடத்தில்செல்வாக்கு, தனவரவு, காரியம் கைகூடும், திடீர்பயணம்.

# மட்டு மாவட்டத்தில் 16 நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி திட்டங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உலகவங்கியின் அனுசரணையுடன் 16 நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ் நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பாக உலகவங்கி அதிகாரிகள் குழு அரசாங்க அதிபர், திட்டப் பணிப்பாளர் ஆகியோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் அவ்விடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டப் பணிகள் அணைக்கட்டுகள், விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (உ-8)

மாகாணக் கல்விப்பணிப்பாளர்

### குமார், நிமலராஜன் படு கொலை

# மீள் விசாரணைக்கு ஈ. பி. டி. பி. வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

அமரர் குமார் பொன்னம்பலம், மற்றும் நிமலராஜன் போன்றவர்களின் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக மீண்டும் புலன் விசாரணைகள் நடத்தப் படவேண்டுமென்று சட்டமாஅதிபர் பணிப்புரை விடுத்துள்ளமை வரவேற்பிற் குரியதாகும் ஏன்எனில்இந்தப்படுகொலை சம்பவங்களின் பின்னால் இருக்கக்கூடிய சக்திகள்பற்றி வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படவேண்டியது அவசியமானதாகும். கபடத்தனமான அரசியல் உள் நோக்கங்களுடன் கண்மூடித்தனமாக குற்றம் சுமத்தும்நிலைமையை இத்தகைய மீள் விசாரணை நிச்சயம் அம்பலத்திற்கு கொலைச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் இனங் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் அப்போதுதான் அரசியல் காரணங்களுக்கான படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பது சாத்தியமானதாகும். அரசியல் படுகொலைகளும், பழிவாங்கும் கொலைகளும் நிரந்தரமாக நிறுத்தப் படுவதே உண்மையான சமாதானம் நிலை பெறுவதற்கு வழிகோலக்கூடியதாகும்

எனவே குமார் பொன்னம்பலம், நிமலராஜன் போன்றவர்களின் கொலைச் சம்பவங்கள் மட்டுமன்றி நீலன் திருச்செல்வம், நிமலன் சௌந்தர நாயகம், போன்ற அரசியல் வாதிகளினதும் செழியன் பேரின்நாயகம், அற்புதராஜா

### மாகாணக் கல்விப்பணிப்பாளர்

## வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)

மாகாண சபைகளில் வெற்றிடமாகவுள்ள மாகாணக் கல்விப்பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலர் டி. எம். தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

வடக்கு, கிழக்கு, தென் வடமத்திய, வடமேல் மாகாணங்களிலேயே இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

(உ-8)

## வன்னிக்கு நேற்று 10 லொறிகளில் யூரியா உரம் எடுத்துச் செல்கை

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிகளிற்கு 8 வருடங்களின் பின்னர் நேற்று 10 லொறிகளில் யூரியாஉரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் ரி.ரகுநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இதைவிட வேறு 10 லொறிகளில்உணவுப்பொருட்கள் அடங்கலாக வேறு பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் வன்னிப்பகுதிகளிலிருந்து பிரமனாலங்குளம் ஊடாக மோட்டார் சைக்கிள்கள், உழவு இயந்திரங்கள் உட்பட மக்களின் பாவனைக்குரிய ஏனைய வாகனங்களை கொண்டு செல்ல முடியும் என வவுனியா மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாகனங்களுக்குரிய பதிவுப் புத்தகம், காப்புறுதிப் பத்திரம், நடப்பு வருடத்துக்குரிய வாகன அனுமதிப் பத்திரம் என்பவற்றையும் வாகனச் சாரதிகள் கொண்டு செல்ல வேண்டும்எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-8)

வாக்கு, தனவரவு, காரியம் கைகூடும், திடீர்பயணம்.

### கன்னி

உடல்நலம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும், இனிய சம்பவம்.

### துலாம்

குடும்பக் கலகம், திடீர்நன்மை, சோகம், வியாபார நன்மை.

### விருச்சிகம்

மனச் சஞ்சலம், தொழில் நன்மை, குடும்பசுகம், காரிய தாமதம்.

### தனுசு

தனவரவு, பிரயாண நன்மை காரிய அனுகூலம், அன்னியர் சந்திப்பு.

### மகரம்

பொருள் விரயம், மனக் குழப்பம், சொத்துக்களால் நன்மை, வாய்தர்க்கம்.

### கும்பம்

ஜனவசியம், தொழில் கஷ்டம், காரியம் நிறைவேறும், நல்ல முயற்சி

### மீனம்

பிரயாணக்கஷ்டம், முயற்சி தாமதம், வீண்கோபம் பொருள் விரயம்.

பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.

**வளவன்**

இத்தகைய மீள் விசாரணை நிச்சயம் அம்பலத்திற்கு கொண்டுவரும் என்றே நம்புகின்றோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. யின் செயலாளர்நாயகமும் யாழ்ப்பாணமாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான கே. என் டக்ளஸ்தேவானந்தா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

மர்மமான முறையில் படுகொலைக்கு இலக்கான முக்கியஸ்தர்கள் அனைவரதும் படு வாதிகளினதும் செழியன் பேரின்நாயகம், அற்புதராஜா அன்ரனிதாஸ் போன்ற ஊடகவியலாளர்களதும் படுகொலைகள் பற்றிய மர்ம முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட வேண்டும் இத்தகைய படுகொலைகள் பற்றிய விசாரணைகளில் எவ்விதமான பாரபட்சமும் இல்லாமல் அனைத்து அசம்பாவித சம்பவங்கள் குறித்தும் பூரணமாக மீள் பரிசீலனைக்கு உள்ளாக்கப் படவேண்டும் எனக் கோருகின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது

(கு)

## விவசாய சம்மேளனங்களின் செயற்பாடுகளில் அதிருப்தி

(கோப்பாய்)

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செயற்படவேண்டிய பொது அமைப்புக்கள் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி தமது அங்கத்துவப் பணத்தை வசூலிப்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்துவதாக அங்கத்துவர்கள் தரப்பில் கவலைதெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய்ப் பகுதியிலுள்ள சிலவிவசாயிகள் சம்மேளனங்கள் விவசாயிகளுக்கு தேவையானமண்ணெண்ணையைப் பெறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்து அங்கத்துவப் பணத்தைப் பெற்றும் விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய இதுவரைஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வில்லை என விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது

(உ-79)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது

# இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தை திரித்துக் கூறி வாக்குவேட்டையாடலாகாது

### பெபரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது போட்டியிடும் கட்சிகள், நோர்வே அனுசரணையுடனான சமாதான நடவடிக்கைகளை ஒரு பிரிவினை தொடர்பான விவகாரம் என்று காண்பித்து, தத்தமது கட்சிகளுக்கு அனுகூலம் தேடும் குறுகிய முயற்சிகளில் ஈடுபடலாகாது என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான நடவடிக்கைக்குழு (பெபரல்) கோரிக்கை விடுத்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், உள்ளூராட்சித் தேர்தல்கள் அன்றாடம் நடைபெறவேண்டிய அவ்வூர் விவகாரங்களை கவனிப்பதற்குப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கென்று நடைபெறுகின்ற இத்தேர்தல் நீண்டகாலத்திற்குப்பின் யுத்தநிறுத்தம் அமுலிலிருக்கும் நல்ல சூழ்நிலையொன்றில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மக்களும் வாக்களிக்கும் விதத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று பெபரல் அமைப்பு தேர்தல் ஆணையாளரையும் கேட்டுள்ளது.

அத்துடன், இத்தேர்தல்களைமுடிந்தவிரைவில்நடத்த வேண்டும், அதனால் சமாதான முயற்சிகள் தடங்கலின்றி முன்னெடுக்கப்படவும் உதவும்.

தாம் அரசாங்கத்தின் சமாதானமுயற்சிகளுடன்முழுமையாக ஒத்துப் போகவுள்ளதாக ஜனாதிபதி குமாரதுங்க காத்மண்டுவில்தெரிவித்திருந்தமை எமக்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது.

புதிய அரசின் கீழ் நடைபெறும் முதலாவது தேர்தலும் இதுவாகும்.ஐ.தே.மு அறிவித்துள்ள புதிய அரசியல் கலாசாரமும் ஊக்கமளிப்பதாகவுள்ளது.சகல கட்சிகளும் உண்மையான ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்குமான உகந்த சூழலை உருவாக்க முயற்சித்தல் வேண்டும் இவ்வாறு பெபரல் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது. (உ)

## பொதுஜன ஐக்கிய முன்னணி

# நாடுதழுவிய ரீதியில் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிந்து ஒரு மாதகாலத்துக்கு மேலாகியும் தமது கட்சியின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுவதாகவும் அதற்கு எதிர்ப்புத்தெரிவித்துநாடுதழுவிய ரீதியில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்நடத்தப்போவதாக நேற்று முன்தினம்நடைபெற்றபொதுஜனஐக்கியமுன்னணியின் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சித்தேர்தல்களில் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருவதா?இல்லையா? என்பது பற்றியும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நிலைப்பாடுகளினைத் தெரிவித்த பின்பே சமாதான முயற்சிகளுக்குஆதரவளிப்பது தொடர்பாக தீர்மானிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்படி தீர்மானங்களை நேற்று நடைபெற்றஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்நிறைவேற்றுக் குழுவும் ஆதரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வடம. கிழக்கில் கலாசாரப் பேரவையால் பயிற்சி வகுப்புக்கள்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகலாசாரப் பேரவை, உதவி அரசாங்க அதிபர் அலுவலகஊழியர்களிற்கு 'ஒகன்' இசைப் பயிற்சி, பண்ணிசைப் பயிற்சி ஆகிய வகுப்புக்களை நடத்தி வருகிறது.

இவ்வலுவலகத்தில் கடமையாற்றும் முப்பது உத்தியோகத்தர்கள இப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றி வருகின்றனர்

இப் பயிற்சி வகுப்புக்கள் ஆறு மாதம் நடைபெறுமென கலாசாரத் தலைவர் வி.பி. வேலாயுதம்பிள்ளை தெரிவித்துள்ளார். (செ-42)

## அவுஸ்திரேலியாவில் ஏழை மாணவர் நிதியம் உதயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்விபயிலும் வறுமைக் கோட்டுக்குஉட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு அவுஸ்திரேலியாவில் வாழும் கல்லூரிப் பழைய மாணவர்களால் ''அவுஸ்திரேலிய ஏழை மாணவர் நிதியம்'' என்ற பெயரில் அமைப்பொன்றுஉருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிதி உதவியின் மூலம் தற்போது கல்லூரியில் பயிலும் 50 மாணவர்கள் பயன் பெற்றுவருகின்றனர்.

இம் மாணவர்களுக்கு கற்றலுக்கு உதவும் கல்வி உபகரணங்களும் இடைவேளையின் போது சிற்றுண்டி வகைகளும் வழங்கப்பட்டுவருகின்றன.

ஸ்கந்தா பழைய மாணவர் சங்க அவுஸ்திரேலியாக்கிளை தொடர்ந்து இந்த உதவியை வழங்கிஏழை மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு தொண்டாற்றுவது குறித்து கல்விமான்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (உ-106)

## ஆன்மீக எழுச்சி வாரம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கடந்த 15 ஆம் திகதி முதல் ஆன்மீக எழுச்சி வாரம் அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

தினமும் காலைப் பிரார்த்தனையின் போது மாணவர்களதும் ஆசிரியர்களதும் சிறப்புஉரைகளும் பக்தி கீதங்களும் இடம் பெற்று வருகின்றன. (உ-106)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமசைவகலை பண்பாட்டுப்பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில்நாளை வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணிக்குவட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ.அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''கடவுள் வடிவம்'' என்னும் தலைப்பில் வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## திரைக்கலை சங்கத்தில் இணையலாம்

(யாழ்ப்பாணம்)

திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையில் அங்கத்தவர்களாக இணைந்துசெயற்பட விரும்புபவர்கள் க.தேவதாசன், பொதுச் செயலாளர் 'சலனசித்திரம்' ஞானவில்லா, கரவெட்டி மத்தி கரவெட்டி என்ற முகவரியுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-106)

## கோழிகளுக்கு தூக்க நோய்

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் தற்போது கோழிகளுக்கு ஏற்பட்டுள்ள தூக்க நோய் காரணமாக பெருமளவு கோழிகள் இறந்து போயுள்ளன. (செ-79)

## யாழ். நூலக புனரமைப்புக்கு 70 மில்லியன் நிதி வழங்க அமைச்சர் ஜயலத் உறுதி

(கொழும்பு)

தமிழர்களின் கலாசார அடையாளப் பொக்கிஷங்களில் ஒன்றாக காணப்படும் யாழ். நூலகத்தை முழுமையாகக் கட்டியெழுப்புவதற்கு யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர், நூலகத்தில் தற்போது இடம் பெற்றுவரும் கட்டட வேலைகளை பார்வையிட்டபோதே

## புலிகளின் பகுதிக்குச் செல்ல

# வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுப்பு

(கொழும்பு)

காணாமல் போனபடை... ளையும் தம்மோடு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும்

யாகக் கட்டியெழுப்புவதற்கு தேவைப்படும் 70 மில்லியன் ரூபாவை வழங்குவதற்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா உறுதியளித்துள்ளார்.

பெற்றுவரும் கட்டட வேலைகளை பார்வையிட்டபோதே இதனைத் தெரிவித்து ளார்.

1983 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் தீ மூட்டி எரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

(கொழும்பு)

காணாமல் போனபடை வீரர்களின் உறவினர்கள் சங்கம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்கு விஜயம் செய்யும் போதுஇலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளையும் தம்மோடு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

நோர்வே, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் தூதரகங்களையே தம்மோடு தலா ஒரு பிரதிநிதியை வருமாறு அழைப்பு விடுத்து ளது.

இதேவேளை, 60க்கும்மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இவர்களுடன் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி சங்கத்தின் தலைவர் ஈ. பி. நாணயக்கார, 200க்கு மேற்பட்டஇராணுவ வீரர்கள புலிகளினால்சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

(உ)

# புற்று நோயாளர் நலனோம்பு நிதியத்தால் 56 பேர் இதுவரை பயன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புற்று நோயாளர் நலனோம்பு நிதியத்தினால் இதுவரை 1இலட்சத்து 18 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது.

லண்டன் சிவயோகம் அறக்கட்டளையின் உதவியுடன் இந்து சமய அன்பர்கள் வழங்குகின்ற ஆதரவினால் இந்நிதியம் உருவாக்கப்பட்டு வருவாய் குறைந்த புற்று நோயாளருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 56 நோயாளிகள் இந் நிதியைப் பெற்று வருவதாகவும் தகுதியுடையோர் விண்ணப்பித்து இவ்வுதவியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இந் நிதிய ஸ்தாபகர் ஆறு. திருமுருகன் தெரிவித்து ளார்.

(உ-106)

## கும்பாபிஷேகம

(யாழ்ப்பாணம்)

நயினாதீவுதெற்கு மலையிற்புலம் ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டாபகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11. 00மணிக்கு பிரதிஷ்டா கிரியா கலாபமணி சிவ ஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

(செ)

# தடை செய்யப்பட்ட தேமோபெரிக் ரொக்கட் யுத்த முனையில் பாவிப்பு

(கொழும்பு)

இலங்கைஇராணுவம்கடந்த வருட நடுப்பகுதியில் கொள்வனவு செய்த சர்ச்சைக்குரியதும் தடை செய்யப்பட்டது 'மானதேமோபெரிக்' (ஷமல் ரொக்கட்) யுத்த முனையில் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைத் தாக்கும் வகையில், அவர்களின் பகுதிக்கு, நீண்டதூரம்ஊடுருவும் படையணி இந்த ஆயுதத்தைக் கொண்டு சென்றதாகவும்,

முதன்முறையாகஇலங்கைப் படையினர் இந்த ஆயுதத்தை புலிகளின் பதுங்குகுழிஒன்றின் மீதுபயன்படுத்திபரிசோதித்த போது, அதற்குள் இருந்தபுலிகள் கருகி இறந்ததுடன், வெளியே இருந்தவர்கள் மிக மோசமான எரிகாயங்களுக்கு ஆளானதாகவும் இராணுவ அதிகாரிகள் இதனை அவதானித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை,

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி வீட்டில் இரகசிய ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து மேற்படி தேமோ பெரிக்ஆயுதங்க ் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### கலாசாரப் பேரவை

# உபகரணம் கொள்வனவு

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவுகலாசாரப்பேரவை தமது கலாசார நடவடிக்கைகளுக்காக ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஒலி,ஒளி,இசை உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது.

இதற்கான நிதிவடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்டதாக கலாசாரப் பேரவைத் தலைவர் வி. பி. வேலாயுதம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

(செ-42)

# கடவுளின் கரங்களை உறுதியாகப் பற்றுவதே

# சிக்கல்களிலிருந்து விடுதலை பெறச் சிறந்த வழி

**ம. சிவயோகசுந்தரம்**

நல்லூர்

இன்றைய சிக்கல்களிலிருந்து விடுதலை பெற ஒரேஒருவழி ஒவ்வொருவரும் தாம் வணங்கும் கடவுளின் கரங்களை உறுதியாகப் பற்றுவதுதான் என்கிறார் பகவான் சத்திய சாயிபாபா. பூரண அவதாரமான பகவான் பாபாவின் காலத்தில் வாழும் எமக்கு அவர் தரும் செய்தி ''நானிருக்கப் பயமேன்'' என்பது தான்எச்சமயத்தவரானாலும் தாம் வணங்கும் கடவுளை பூரண சரணாகதியுடன் வணங்கும் போது நாம் காப்பாற்றப்படுவதை எம் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வாக நாம் காணமுடிகின்றது. ''சாயிராம்'' என்ற மூல மந்திரத்தை சொல்லிய அடியார்கள் உலகின்மூலை முடுக்கெல்லாம் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர் என்பது உலகறிந்த உண்மை.

நாமஸ் மரணை

அண்மையில் அமெரிக்காவில் நடந்த அனர்த்தங்கள் யாவரும் அறிந்ததே. Dr. மைக்கேல் கோல்ஸ்டெயின் என்னும் அமெரிக்க நாட்டு சாயி நிறுவனங்களின் தலைவர் நியுயோர்க்கிலோஅல்லது வாஷிங்டனிலோ உள்ள சாயி நிறுவனங்கள், சாயி அடியார்கட்கு எதுவித இழப்புமின்றி காப்பாற்றப்பட்டதை சுவாமிக்கு அறிவித்தார். அதற்கு சுவாமி அளித்தபதில் தைரியமாக இருங்கள் மனிதகுண இயல்பை அடித்துவிடும் வகையில் இப்பேற்பட்ட சம்பவங்கள் காலத்திற்கு காலம் நடைபெறுகின்றன. ஆனால் இவற்றை மனவலுவுடன் எதிர்கொள்ளவேண்டும். நாமஸ் மரணை செய்து இறைவனை எந்நேரமும் நினைக்க வேண்டிய சமயம் இதுவாகும்.

சாதனா

தன்னியல்பாக பிரயத்தனம் இன்றி தாய் தன் குழந்தைகளை காப்பாற்றுவது போல பசு தன் கன்றுகளை காப்பற்றுவதுபோல கண்ணை இமை காப்பாற்றுவதுபோல பரிபூரண பரிசுத்த பக்தியுடன் தன்னை வணங்குபவர்களை இறைவன் எக்காலத்திலும் எல்லா வகையிலும் காப்பாற்றுவான்.

இன்றைய காலசட்டத்தில் உலகத்திலுள்ள பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு நாம் அடையும் இலக்கை பகவான் சத்திய சாயிபாபா தமது ''SAI'' என்ற பேரிலேயே அடங்கியிருப்பதாக கூறுகிறார்.

**S - Social Sadana –** சமூக சாதனா.

**A – Association Sadana –** குடும்ப சாதனா.

**I – Individual Sadana .** தனிமனித சாதனா.

மேற்கூறிய தனி மனித, குடும்ப, சமூக சாதனா என்பவற்றை நாம் சரியாகப் பின்பற்றினால் எமது உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்ந்து எமது வாழ்க்கையின் இலக்கினை வெகுசுலபமாகவெற்றி கொளளலாம்? ஆனால் இதை அடைய சுவாமி எங்களுக்கு ஒன்பது ஒழுக்கக் கோவைகளை தந்துள்ளார். இதற்கு எமக்கு எதுவிதமேற்படிப்பும் தேவையில்லை. எமது எண்ணம் சொல் செயல் என்பவற்றை அவதானித்தால் இந்த ஒன்பது கோவைகளையும்நாம்வாழ்க்கையில் கடைப்பிடிக்கலாம்.

ஆன்மீகம்

உலகக்கல்வி என்பது வாழ்வதற்காக. ஆனால் ஆன்மீக கல்வி என்பது வாழ்க்கைக்காக. தற்கால நாகரிக வாழ்க்கையில் எல்லோரும் சமயத்தைக் குழப்புவதை நாம் காணலாம். ஆன்மீக மென்பது மனிதத்தன்மையிலிருந்து தெய்வீகத் தன்மைக்கு பிரவேசிப்பதல்ல, ஆன்மீகத்தை பூஜைகள், பஜனைகள், கோவில் போதல், புனிதயாத்திரை எனத் தற்கால இளைஞர்கள் உட்பட பெரியோர்கள் தவறுதலாக கற்பனை செய்கின்றனர். உண்மையில் ஆத்மீக மென்பது மனிதத் தன்மை மூலம் தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர்தல் ஆகும்.

ஒப்பற்ற பரதத்துவம் (தெய்வத்துவம்) வெளிப்படுதலே உண்மையான ஆத்மீகமாகும். தன்னுள் இருக்கும் தெய்வத்தை வெளிப்படுத்துதலே உண்மையான ஆத்மீகத்தை அடையும் வழியாகும். இதற்கு சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை அகிம்சையைக் கடைப்பிடித்து எமது எண்ணம், சொல், செயல் ஒருமித்து இருக்குமானால் இறைவனே, எம்மைத் தேடி வருவார். 1940 ம் ஆண்டு காசியாத்திரைசென்றயோகர் சுவாமிகள் தமது பக்தருக்கு எழுதிய கடிதத்தில் ''தேடித் திரிந்து அலைந்து காசிக்கு வந்து காசி விசுவநாதனைக் கண்டேன் என்னுள்'' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த, இருக்கின்ற, இருக்கப் போகின்ற யாழ்ப்பாணத்தவருக்கு தேவையான கருமாதிகளை எல்லாம் இங்கேயே (காசியில்) செய்து விட்டேன் இனிமேல் நீங்கள் உங்களுக்கு கியைந்தபடி வாழ்ந்து அன்பாக வாழக் கடவீர்களாக! என அருமையாக புகட்டியுள்ளார்.

ஆகவே அன்பின் மூலமே அமைதி கிட்டும். எல்லோரும் இறைவனின் கரத்தை பிடித்து அன்பாக வாழ பகவானின் அருளை வேண்டுகிறோம்.

## படசாலைகள் இயங்குவதில்லை

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் இரு பாடசாலைகள், ரிவிரெச இராணுவ நடவடிக்கையினால் இன்றுவரைமூடப்பட்டுள்ளன.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், அச்செழு மெதடிஸ்த மிஷன் பாடசலை ஆகிய இரண்டுமே இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதியில்இருப்பதனால் வசதிகள் குறைந்த வேறிடத்தில் இயங்குகின்றன.

இப்பாடசாலையை உரிய இடத்தில் இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு பலகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-79)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை வீதி வட்டுக் கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி கஜேந்திரன்(வயது-21) என்பவர் கடந்த11ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை ஐ.சி.ஆர்.சி மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக,சம்பந்தப்பட்டஇளைஞனின் தாயார் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (உ.9)

# நாடெங்கும் சட்டவிரோத ஆயுதங்களைவுக்கு பொலிஸாருக்கு அனுமதி

(கொழும்பு)

பாதுகாப்பமைச்சின் அனுமதியின்றி நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருக்கும் தனி நபர்களிடமிருந்தும், அரசியல் கட்சிகளிடமிருந்தும் அவற்றைப் பறிமுதல்செய்வதற்கு நேற்று முன்றினம் இரவு முதல் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளதாக உள் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்தப் பணிப்புரையை பொலிஸாருக்கு வழங்கியுள்ளதாகவும் உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர். பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான இறுதிநாள் நேற்று முன்தினம் இரவுடன் முடிவடைந்தமையால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை எவரும் சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு முன்வரவில்லை. இதனாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகஅமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட ஆயுதங்களைத் தவிர கூடுதலாக ஆயுதம் வைத்திருக்கும் தமிழ்க் கட்சிகளின் முகாம்கள் சோதனையிடப்படலாமென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேற்படி சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் பற்றி பொதுமக்களுக்கு தகவல் தெரிந்தால் உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் விசாரணை கருமபீடத்திற்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-4)

## பாம்பு தீண்டி பெண் மரணம்

பாம்புக் கடிக்கு இலக்காகி யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் நேற்று முன் தினம் அங்கு மரணமானார்.

மண்டை தீவு- 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விநாகேந்திரன்- கோணேஸ்வரி (வயது-30) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (உ-104)

**மறைந்தார் மாண்பு**

# நீர்வை இராசேந்திரக்குருக்கள் நினைவான

# வெளியீடுகள் பொருத்தமான காணிக்கையே

**மு. நாவலன்**

நீர்வைக் கந்தன்என்றதும் இராஜேந்திரக் குருக்களின் நினைவுகளே எம்முள் எழும். கம்பீரத் தோற்றம், ஆளுமை பன்முகப்பட்ட ஆற்றல்கள் ஒருங்கே பெற்ற அந்தணர் அவர். பலவகைப் பரிமாணங்கள் கொண்ட ஆளுமை அவருடையது. ஆண்டு ஒன்று முடிந்த இத்தருணத்தில் அவரை நினைவுகூருதல் மிகப் பொருத்தமானதே.

நினைவு வெளியீடு

அவரது முதலாண்டு பூர்த்தியின் போது நினைவு வெளியீடாக இரு நூல்கள் வந்துள்ளன. ஒன்று நினைவுகளை மீட்டு பலராலும் எழுதப்பட்ட அஞ்சலித்தொகுப்பு. மற்றையது முருகனின் மூர்த்தங்கள் பற்றியவிளக்கங்களாக அமைந்த நூலாகும்.

நினைவுமலர்கள் ஒவ்வொருவரும் இறக்கும்போது வெளியிடப்படுதல் மரபுவழி. ஆனால் அவை பிற்பாடு வலுவிழந்து மறக்கப்பட்டும் போகலாம். ஆனால் கண் முன்னே நின்று நினைவுகளை எழுப்பக்கூடியதாய்ச் சிலரின் வாழ்வு அமைந்துவிடுவதுண்டு. அத்தகையதொரு வாழ்வு இராசுக் குருக்களுடையது. அவரின் குணாம்சங்கள் பலவும் அஞ்சலித் தொகுப்பிற் பதிவாகி உள்ளன.

அஞ்சலித்தொகுப்பு இவற்றைத் தெரிவிக்க அவரின் முதலாண்டு நினைவாக அருள்மிகு செல்லக்கதிர்காம கோயில் குருக்களான மணி ஐயாவினாலும் முருகனின் திருஉருவ விளக்கங்கள் கொண்ட நூல்ஒன்று வெளியிடப்பட்டுளளது.

அழகன் முருகனின் பல்வேறு மூர்த்தங்களை விளக்கும் இந்நூல் அழகிய மொழி நடையில் அமைந்துள்ளது. கருத்துச் செறிவும் முருகனின் மூர்த்தங்கள் கூறும் விளக்கங்களும் இந்நூலின் சிறப்பம்சங்களாகும்.

முருகன் பெருமை

முருகனின் பெருமையை பலநூல்கள் விதந்துரைக்கின்றன. கந்தபுராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய தமிழ்நூல்களும் குமாரதந்திரம், ஸ்ரீதத்துவநீதி முதலிய வடமொழி நூல்களும் அவற்றுள் சிலவாகும். இந்நூல்களில் எடுத்தாளப்பட்ட விளக்கங்களை எல்லாம் வடமொழி அறியாதவரும் அறியும்படி அழகிய முறையில் எளியநடையில் தந்திருப்பது பாராட்டிற்குரியதே. இந்நூலில் விளக்கங்கள் மட்டுமல்ல முருகனின் திருவுருவ பேதங்களைக் காட்சிப்படுத்தும் பத்தொன்பது படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

மனம், மொழி, மெய்இவற்றிற்கு எட்டாத பரம்பொருள் பக்தர்கள் பொருட்டுப் பற்பல திருவுருவங்கள் மூலம் தன்னை வெளிப்படுத்துகின்றது. இத்தன்மையன், இத்திறத்தினன், இந்த நாமம் உடையவன்என்று கூறமுடியாத இறைவன் பற்றிச் சான்றோர்களும், பக்தர்களும் பலவாறு கூறியுள்ளனர். இவற்றின் சாரத்தினைத் திரட்டி மணிஐயா திறம்படத் தந்துள்ளார். அடியார்க்கு அருள்புரியும் அழகன் முருகன் திருவுருவங்கள் என்பதே இந்நூலின் பெயராகும்.

கந்தரனுபூதி பாடுதல்

இராசுக் குருக்களை அன்பர்கள் அபிமானத்துடன் நினைவு கூரும் இத்தருணத்தில் ஒருவிடயம் நினைவுக்கு வருகிறது. வெள்ளிதோறும் கந்தரனுபூதியை பக்திப் பரவசத்துடன் பாடி ஏனையோரையும் பாடவைத்த திறன், அதுவும் குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்று மீண்டும் மீண்டும் உருவேறியவர்போல் பாடும்உருக்கம்இப்படி எத்தனையோவிடயங்கள் நினைவுக்கு வருகின்றன. அவரின் சரிதை மகத்துவம் உடையதே

## சுதேசிக்

அருளும் கொண்ட சொற்களால் அன்னையின் வருகையை உலகுக்கு அறிவியுங்கள்' என்கிறார் சுவாமிஜி.

சுவாமி விவேகானந்தர் கூறிய புகழ்பெற்றகாட்சியும், உறுதி மொழியும் நனவாக உழைப்போமாக!

''நீங்கள் சமயத்தைத் தூக்கி எறிந்து விட்டு அரசியலையோ'' சமூக சேவையையோ கையில் தூக்கிக் கொண்டால் அதனை தேசிய வாழ்வின் உயிர்ச்சக்தியாகக் கருதினால் நீங்கள் அழிந்து போவீர்கள். சமயம்! சமயம் மட்டுமே பாரதத்தின் உயர வாழ்க்கை ஆகும் சமயம் அழிந்து விட்டால் அரசியலாலும் சமுதாய சீர்திருத்தத்தாலும் குபேரனின் செல்வத்தாலும் நாட்டைக் காப்பாற்றமுடியாது ஆன்மீகத்தை விட்டு மேல் நாட்டு செல்வச் செழிப்பு நாகரிகத்தின் பின்னால் போனால் தலைமுறைகளில்நீங்கள் பூண்டற்றுப் போய்விடுவீர்கள்''.

# சமூக சேவை என்ற பெயரில் நம் மத்தியில் ஏமாற்றமும் பித்தலாட்டமும் இடம்பெறுகின்றன

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் கவலை

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தில் பணம் தாராளமாகப் புழங்குகின்றது ஆனால் அந்தப் பணத்தில் ஒருசிறு பகுதியையாவது பொதுப்பணிக்கும் செலவிடுவதில் எம்மவர் அக்கறை செலுத்துவதில்லை.

அத்துடன், பொது நிறுவனங்கள் சமூகப் பணிக்கு வழங்குகின்ற நிதி உதவிகளில் பெரும்பாலானவை உரிய இடத்தை வந்தடைவதில்லை என்பதும் மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற முச்சக்கர வண்டி வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

சமூகவியல் சமூகத் தலைவர் செல்வி ச.காயத்திரிதலைமையில் நடைபெற்றஇந்நிகழ்வில் துணைவேந்தர்தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமூகப்பணி என்ற பெயரில் ஏமாற்றுக்களும், பித்தலாட்டங்களுமே எம் மத்தியில் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், சிறிய பணியைச் செய்வதற்கும் பெரிய விளம்பரப் படுத்துபவர்கள் நம்மிடையே மலிந்து காணப்படுகின்றனர்.

அன்னை தெரேசா, தங்கம்மா அப்பாக்குட்டிபோன்ற சேவையுள்ளம் கொண்டவர்கள் எமது சமூகத்தில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் உருவாக்கம் பெற வேண்டியதன் அவசியப்பாடு இன்று எழுந்துள்ளது.

சமூகப்பணி புரிய, தளராத மனமும் நன்னடத்தையும் இரக்க குணமும் பிரதிபலன்களை எதிர்பாராத மனமும் வேண்டும்.

பல்வேறு நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவிக்கும் குடாநாட்டுமக்களுக்குஆதரவளிக்க எவருமில்லை.இந்த நிலைப்பாடே தற்கொலைகளில் யாழ்.குடாநாடு முன்னணி வகிக்க ஒரு காரணம் என்பது பலரும் அறிந்த விடயம்.

பணமும், பேரும், புகழும் எமது எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கவும், கலாசார விழுமியங்களை கட்டிக்காக்கவும் உதவப் போவதில்லை. அன்பும் அறனும் மிக்க சமுதாயமே ஆரோக்கியமான தாகத் திகழும் என்று குறிப்பிட்டார். (உ-19)

## பொங்குதமிழ் இணையத் தளத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் பொங்குதமிழ் நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இணையத் தளத்தில் இணைக்கப்படவுள்ளன.

இந்த இணையத் தளத்தில் மாணவர் ஒன்றியத்தின் கடந்தகால, நிகழ் கால, எதிர்காலச் செயற்பாடுகள், தமிழ் மக்களின் எழுச்சி சார்ந்த சமூகச் செயற்பாடுகள், செய்திகள், வரலாறு,புகைப் படங்கள் பொங்கு தமிழ் ஒளி,ஒலி நாடாக்கள் வெளியிடப்படவுள்ளன. (உ)

## தனிமையில் வசித்த வயோதிபர் மீது திருட்டுக்குழு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தனிமையில்வாழ்ந்த வயோதிபர் மீது திருட்டுக் குழு ஒன்று நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த முத்துத்தம்பி சுப்பிரமணியம் (வயது-73) என்பவரே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். (உ-104)

## குழு மோதல்கள் யாழ் நகரில் அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். பிரதான வீதிப் பகுதியில் இரு இளைஞர் கோஷ்டிகளிடையே ஏற்பட்ட மோதலை இராணுவத்தினர் தலையிட்டு முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அச்சக வீதி சந்திக்கும்பகுதிக்கு அண்மையில்மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் குழுக்களை இராணுவம் தடுத்து நிறுத்தி சம்பந்தப்பட்ட இருவர் எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டதோடு அப்பகுதி கடை ஒன்றினுள் இருந்த இளைஞர்களின் அடையாள அட்டையும் பரிசீலிக்கப்பட்டது.

தேவையற்ற சண்டைகள், குழு மோதல்கள் யாழ். நகரில் தற்போது அதிகரித்து வருகின்றமை குறித்து மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர். (உ-59)

## வீரசிங்கம் மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவுச் சின்னமான வீரசிங்கம் மண்டபத்தின் திறப்பு விழா நாளைமறுதினம் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் முழுவதும் சேதமடைந்து இப்போது புனரமைக்கப்பட்டுள்ள இம்மண்டபத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் திறந்துவைக்கவுள்ளார்.

யாழ். மாவட்டகூட்டுறவுச் சபையின் தலைவர் பெ. கனகசபாபதியின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் செ. கு. சண்முகநாதன், செ. கனகசபாபதி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அருட்தந்தை ஜே. பி. ஈ.செல்வராஜா ஆகியோர் அருளாசி வழங்கவுள்ளனர். (எ)

## 50 இலட்சம் வாக்காளர் அட்டைகள் தயார்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி இதுவரை அறிவிக்கப்படாத போதிலும் 50 இலட்சம் வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலுக்குப் பயன்படுத்தப்படாத நிலையில் இருந்த வாக்காளர் அட்டைகளை இத்தேர்தலுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

அத்துடன் ஒரு கோடியே 24 இலட்சத்து 28 ஆயிரத்து 562 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## வன்னி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு விருப்பம்

(வவுனியா)

இந்நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் ஒரே நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி அரசு செயற்பட்டு வருகிறது.

அதன் ஒரு கட்டமாகவே வன்னிமக்களின் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றும் பொருட்டு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது என்று புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா வவுனியா வந்திருந்த இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி மக்கள மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

நாட்டில் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நலிவுற்ற வன்னிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே அரசு விரும்புகிறது என்று கூறினார்.

இச் சந்தர்ப்பத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்த மக்கள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்; ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமானால், கால தாமதமின்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும், சமாதான முயற்சி வீண்போகாது இம் முயற்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்என்றும் கூறினார்கள். (வ)

## தமிழர்களின் உரிமையை வழங்கக்கோரி கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

'தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குங்கள் அல்லது அவர்கள் பிரிந்து வாழ அனுமதிகொடுங்கள்.

இவ்வாறான வாசகம் அடங்கிய சுவரொட்டிகள் கொழும்பின் முக்கிய நகரங்களான பொரளை,கோட்டை ஜயவர்த்தனபுர ஆகிய இடங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

சிங்கள மொழியில் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்டுள்ள மேற்படி சுவரொட்டியில் தேசிய ஜனநாயக கூட்டமைப்பு என்ற இயக்கத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுவரொட்டியில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் நியாயமானது பிரிந்து வாழும் உரிமை எந்த இனத்திற்கும் உரித்தானது என்ற வாசகங்களும் காணப்படுகின்றன. (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா-சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய நிரந்தர மாணவர்களின் பெற்றோர்களுடனான நிகழ்காலச் சூழ்நிலைகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப10.00மணிக்கு யா-கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும்,பெற்றோர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும்அதிபர் மு.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (உ)

## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வயதெல்லை நீக்கப்படும்

### மு. ஆ. கா. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கல்விநிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பின் (III) பதவி அணிகளுக்கு (பொது/விசேட) புதிதாக ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப வயதெல்லையினை நீக்குவதற்கு கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் 5 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் கல்விநிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு தொடர்பான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதன்படி சேவையிலுள்ள ஆசிரியர்களின் விண்ணப்ப வயதெல்லை 25-45 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சேவையில் உள்ள பல ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் தகைமையினை இழந்திருந்தனர்.

இதுதொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் ஆசிரியர் காங்கிரஸ் கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரைச் சந்தித்து சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து வயதெல்லையை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதியும் அறிவித்தலும் விரைவில் வர்த்தமானி மூலம் வெளியிடப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ)

## போலி நாணயத் தாள்கள் அச்சடித்த நபர் கைது

(கொழும்பு)

பன்னெல பகுதியில் போலி நாணயத் தாள்களை அச்சடித்து வந்த ஒருவரையும் அவருக்கு ஆலோசனைவழங்கி வந்த ஆசிரியர் ஒருவரையும் இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதற்குப் யன் படுத்திய அச்சு இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நாணயத் தாள்கள் குளியாப்பிட்டி, பன்னெல மாத்தளை ஆகிய இடங்களில் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-5)

## இளைஞர் குழு அடாவடி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

தானடி - பிள்ளையார் கோயிலடிப்பகுதியிலுள்ள வீடொன்றிற்கு கடந்த 13ஆம்திகதி இரவு வேளை மதுபோதையில்சென்ற இளைஞர்குழு ஒன்று அங்கிருந்தோரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தில் சின்னத்துரை சிவலிங்கம் (வயது-49) இவரது மனைவிகமலேஸ்வரி, பிள்ளைகளான கயாகரன் (வயது-14)கீர்த்திகா (வயது-1)ஆகியோரே வாள்வெட்டுக் காயங்களுடன் யாழ் - போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்துபொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-104-124)

## சூது விளையாடிய மாதர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பொரளை கொட்டாவீதிப் பகுதியில்உள்ள வீடொன்றில் சூது விளையாட்டில் ஈடுபட்டிருந்த 5 பெண்களை பொரளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் அனைவரும் 35 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும்,

சூது விளையாட்டிற்கு பயன் படுத்தப்பட்ட வீட்டிற்கு வாடகை அறவிடப்பட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (உ-5)

## இன்று ஒரு தகவல்

### பிரம்ம ஞான விளக்கம்

ஒரு நாள் பிரம்மஞானத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் சொல்லப் போய், சிலர்நேராகவே தேடிக் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள் சார்! நான் ஏதோ அந்த ஞானத்தை மொத்தமாக வைத்துக் கொண்டு வியாபாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு, எனக்குக் கொஞ்சம் கொடு, எனக்குக் கொஞ்சம் கொடு, என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். என்னிடம் அது இருந்தால் நான் ஏன் இப்படி அதைப் பற்றி வெளியில் சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்? என்றேன். ''சார் மிகவும் அடக்கமாகப்பேசுகிறார்! நிறைகுடம் தழும்பாது'' என்றார் ஒருவர். வெறும் குடமும் தழும்புகிறதில்லை என்கிற விஷயம் அவருக்குத் தெரியவில்லை.

ஒரு தகப்பனார் தன்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் பிரம்ம ஞானம் வர வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஒரு நல்ல குருவிடம் அனுப்பி வைத்தார். குருகுலவாசம் முடிந்து அவர்கள் இரண்டு பேரும் திரும்பி வந்தார்கள். முதலில் மூத்த பையனைப் பார்த்து ''பிரம்மத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்'' என்றார் தகப்பனார். உடனே அவன் ஒரு பெரிய பிரசங்கமே செய்யஆரம்பித்து விட்டான். வேதங்கள், சாஸ்திரங்களிலிருந்துநிறைய உதாரணங்களையெல்லாம் எடுத்து அடித்துக் கூறிவிட்டான். பிரசங்கம் முடியவில்லை!

''சரி போதும் நிறுத்து'' என்று சொல்லி விட்டு இரண்டாவது பிள்ளையைப்பார்த்து ''பிரம்மத்தைப்பற்றிநீஎன்ன தெரிந்துகொண்டாய்'' என்று தகப்பனார் கேட்டார். அவன் பதில் சொல்லவில்லை . . . . தலையைக் குனிந்து கொண்டு நின்றான். தகப்பனார் பார்த்தார். ''நீதான்பிரம்மத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறாய்'' என்றார். பிரமம் என்றால் என்னஎன்பது பற்றி முழுமையாகத் தெரிந்து விட்டதாகப் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள. அது எப்படியென்றால், பிரமாண்டமான சர்க்கரை மலையில் இருந்து ஒருசிறுதுணுக்கு சர்க்கரையை எடுத்துக் கொண்டு போகிற எறும்பு, அடுத்த தடவை முழு சர்க்கரை மலையையும் தூக்கிக் கொண்டு போவேன் என்று சொல்கிற மாதிரிஇருக்

பார்கள். அவ்வளவுதான் பிரம்மம் என்கிற பெரிய கடலின் கரையில் நின்று அவர்களெல்லாம் காலை நனைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் சொல்ல முடியும். அதில் அவர்கள் மூழ்கவில்லை. மூழ்கியிருந்தால் அவர்கள் திரும்பியிருக்க மாட்டார்கள்.

ஒரு சிறிய உப்பு பொம்மை இருந்ததாம். அதற்கு ஒரு ஆசை! கடல் ஏவ்வளவு ஆழம் என்று நேராக உள்ளே போய்ப் பார்த்துக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதே அந்த ஆசை. ஆசை வந்தபின் சும்மா இருக்குமா? சரி! அளந்து பார்த்துவிடுவோம் என்று தீர்மானித்து உடனே பொத்தென்று கடலில் குதித்தது. கொஞ்சத் தூரம் போனது. உப்புப் பொம்மை கடலில் விழுந்தால் என்ன ஆகும். கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்தது. கொஞ்சநேரத்தில் சுத்தமாகக் கரைந்து ஒன்றுமில்லாமற் போய்விட்டது. அந்தப் பொம்மையால் ஆழத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதையே கண்டுபிடிக்க முடியவில்லையென்று ஆனபின் அது போய்க் கடல் ஆழத்தை எந்தக் காலத்தில் கண்டுபிடிக்கப் போகிறது?

பிரம்ம ஞானம் வந்துவிட்டதென்றால் மனிதன் மௌனமாகி விடுகின்றான். அது வருகிறவரைக்கும் அவன் சர்ச்சை பண்ணிக் கொண்டிருப்பான். தேன் குடிப்பதற்காக ஒரு வண்டு வருகிறது. அது மலர் மேல் உட்காருகிறவரையும் தான் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். உட்கார்ந்து விட்டதென்றால் மௌனமாகி விடுகிறதல்லவா? இவையெல்லாம் இராமகிருஷ்ணருடைய அமுத மொழிகள். இவை ஒருபக்கம் இருக்கட்டும். என்னிடம் வந்து பிரம்ம ஞானத்திற்கு விளக்கம்கேட்ட ஒருவரிடம் எனக்கு என்னென்ன தோன்றியதோ அவற்றையெல்லாம் விளக்கமாகச் சொன்னேன். அவர் என்னிடம் வருகிறபோது நிறைய வளவளா என்று பேசிக்கொண்டு கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். ஒரு அரை மணி நேரம் என்னுடைய பேச்சைக் கேட்டவுடனே அவர் மௌனமாகி விட்டார். பிரம்ம ஞானம் வந்துவிட்ட மாதிரி மௌனமாக எழுந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டார். ஏன் சார்

## வடக்கு- கிழக்கு மக்களுக்கு

# பொருளாதாரத் தடை தளர்வினால் சமாதான நம்பிக்கை வளரும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு அரசாங்கம் பொருளாதாரத் தடையை தளர்த்தியமை சமாதானத்தில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் நல்லெண்ண முயற்சியாகும்.

இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மெலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதிக்கான அத்தியாவசியப் பொருட்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டதை யடுத்து செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஆயுதங்கள், வெடிபொருட்கள், தொலைநோக்கிக் கருவிகள், பென்டோச் பற்றறிகள், சக்தி வாய்ந்த வயர்கள் உட்பட பதினொரு பொருட்களைத் தவிர ஏனையவை பிரமனாளங்குளம், சோதனைச்சாவடியூடாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இது தவிர பெற்றோல், டீசல், சீமெந்து, கம்பிவகைகள் போன்றவை மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே அனுப்பப் பட்டுள்ளன.

இதேவேளைபிரமனாளங்குள சோதனைச்சாவடியூடாக வன்னி செல்லும் பஸ் லொறிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

பிரமனாளங்குளசோதனைச் சாவடி வாரத்தில் மூன்றுநாட்களே முன்னர் படையினரால் திறந்து விடப்பட்டது. ஆனால் நேற்று முன்தினம் தொடக்கம் நான்கு நாளாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதனால் இப்பாதையூடாக செல்லும் பயணிகளின்எண்ணிக்கையும் அதிகரிக்குமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு நேற்றுமுன்தினம் 30லொறிகளில் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-4)

## தமிழ் மக்களின்

# அன்றாடப் பிரச்சினை தீர்வுக்கு முன்னுரிமையளிக்க வேண்டும்

## பல்கலை மாணவர் ஜயலத்திடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னர் கடந்த 20 வருடங்களாகத் தொடர்ந்த யுத்தத்தினால் பொருளாதார சமூகரீதியாகச் சீரழிந்து பாரிய இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் வடக்கு- கிழக்கு மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்திருந்த போது அவரிடம் கையளித்தமகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களின் கஷ்டங்கள் பற்றி அறியும் பொருட்டு, தாங்கள் மேற்கொண்ட வருகை யாழ்ப்பாண மக்களுக்கு சமாதானத்தையும் நல்வாழ்வையும் ஏற்படுத்தும் என்று நம்புவதாககுறிப்பிடப் பட்டுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதுடன் அதன் காலம் நீடிக்கப்பட வேண்டும்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கானபொருளாதாரத்தடை, பிரயாணங்களுக்கான தடைகள் நீக்கப்படுவதுடன்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப் பட்டுள்ள திவ்வியனையும் ஏனையோரையும் விடுதலை செய்து, அச்சட்டத்தின் கீழ் தமிழர்களை கைது செய்வது நிறுத்தப்படல் வேண்டும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

இராணுவ துணைப்படைகளாக உள்ள தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் களையப் படல்,

மக்கள் தமதுசொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு வசதியாக வீடுகளிலும் வணக்கஸ்தலங்களிலும் தங்கியுள்ள இராணுவத்தினரை வெளியேற்றல்,

பேச்சு வார்த்தை கௌரவமானமுறையிலே தொடர்வதற்கு புலிகள் மீதான தடை நீக்கப்படல், ஆகியகோரிக்கைகள் அம் மகஜரில் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ)

# சிறையில் இருந்து தப்பியோடியவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த 4மாதங்களிற்கு முன்னர் யாழ். சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட நல்லூர் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை ரஞ்சன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இன்னும்மூன்றுபேருடன் இணைந்து கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் சிறைச்சாலையில் இருந்து தப்பியோடியவர் என்பது குறிப்பிடத்தக்கது

எடுத்துக் கொண்டு போகிற எறும்பு, அடுத்த தடவை முழு சர்க்கரை மலையையும் தூக்கிக் கொண்டு போவேன் என்று சொல்கிற மாதிரிஇருக்கிறது என்கிறார் இராம கிருஷ்ணபரமஹம்சர்.

பிரமம் என்பது நம்முடைய எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டது. சுகதேவர் மாதிரி உள்ள பெரிய மகான்கள் கூட இது விடயத்தில் ஒருபெரிய எறும்பு என்று சொல்லலாம். அவர்களெல்லாம் ஒரு ஏழெட்டுச் சர்க்கரைத் துணுக்குகளைத் தூக்கிக்கொண்டு போயிருப்

விட்டார். பிரம்ம ஞானம் வந்துவிட்ட மாதிரி மௌனமாக எழுந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டார். ஏன் சார் புறப்பட்டுவிட்டீர்கள் என்றேன் 'தெரியாத்தனமாக உன்னிடம் வந்து விளக்கம் கேட்டுவிட்டேன். அதைக் கேட்டவுடனே ஏற்கனவே கொஞ்ச நஞ்சம் தெரிந்து வைத்திருந்ததையும் மறந்துவிட்டேன். இனிமேல் சந்தேகம் வருவதற்கே சந்தர்ப்பமில்லை. அதனால்தான் மௌனமாகிவிட்டேன்' என்றார். ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

# வவுனியா-திருமலை வீதியை போக்குவரத்துக்கு திறந்து விட முடிவு

(வவுனியா)

கடந்த பத்தாண்டுகாலமாக மூடப்பட்டிருந்த வவுனியா ஹொறவப்பொத்தானை திருகோணமலை வீதி மிக விரைவில் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்படவுள்ளது.

இப்பாதை திறப்பது தொடர்பாக உள்நாட்டமைச்சர் ஜோன் அமரதுங்கா வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபருக்கும், அநுராதபுரம் பொலிஸ்மா அதிபருக்கும் விசேட உத்தரவொன்றைப்பிறப்பித்துள்ளார்.

இந்த உத்தரவில், மேற்படி வீதியை அடுத்த மாதம் இடம்பெறவுள்ள சுதந்திர தினத்துக்கு முன்பு திறந்து விடுமாறு அமைச்சரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் வீதிதிறந்து விடப்படும் பட்சத்தில் திருமலைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்குள் செல்லலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

பட்டுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் சுவாமி விவேகானந்தர் பிறந்த தினத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் கருத்தரங்குத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு ''சுவாமி விவேகானந்தர் துறவும், செய்தியும்'' என்னும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்தவுள்ளார்.

(செ)

# வெற்றிலை விலை அதிகரிப்பு

(கோப்பாய்)

குடா நாட்டில் தற்போது வெற்றிலையின் விலை அதிகரித்துள்ளதுடன், ஒரு வெற்றிலை மூன்று ரூபா வரைவிற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது வெற்றிலைகளில் நடுப்பாகத்தில் ஏற்படுகின்ற பொட்டுப் போன்ற அழுகல் நோயின் தாக்கத்தினாலேயே வெற்றிலை விலை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (உ-79)

கடந்த வருடம், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து

டன் இணைந்து கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் சிறைச்சாலையில் இருந்து தப்பியோடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-9)

# ஊர்காவற்றுறையில் 2002ஆம் ஆண்டுக்கான குழுப்போட்டி ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2002ஆம் ஆண்டுக்கான குழுப்போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதன் முதற் கட்டமாக அன்றைய தினம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கரப்பந்தாட்டப் போட்டி இடம் பெறவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டு அலுவலர் அ. வசந்தன் தெரிவித்துள்ளார்.

(செ-75)

## சிந்தனைக்கு விருந்து

### பலர் பொய்மை உரைப்பர்

வாணிபஞ்செய் தெத்தனையோ மார்க்கங்க
ளாற்பணத்தைப்
பேணிப் பெருஞ்செல்வன் ஆனவன்நான்-பூண்கலனாற்
பொம்மைபோற்காட்சிதரும் என்மகளை வேட்போர்
போல்
பொய்ம்மை உரைப்பார் பலர்.

'பழையவன்'

# உலக தரிசனம்

## ஐ.ரோ. நாடாளுமன்ற புதிய தலைவராக அயர்லாந்து நாட்டவர்

(அயர்லாந்து)

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் புதிய தலைவராக அயர்லாந்தின் லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஆஷ் ஹோக்தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

642 பேர்கொண்டஐரோப்பிய நாடாளுமன்றத்தில் மூன்றாவது வாக்கெடுப்பில் ஆஷ்ஹோக் 298 வாக்குகளைப் பெற்று தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

பதவி விலகும் முன்னாள் தலைவர் திருமதி நிக்கோல் பொன்டேக் 1999ஆம்ஆண்டு தெரிவு செய்யப்பட்டவரென்பது குறிப்பிடத்தக்கது. (து)

## திருவள்ளுவர் விருது

(தஞ்சாவூர்)

தஞ்சை பல்கலைக்கழக துணைவேந்தர் சுந்தரமூர்த்திக்கு திருவள்ளுவர் விருது வழங்கப்பட்டுள்ளது. (து)

## ஈரான் பாராளுமன்ற சபாநாயகர் வெளிநடப்பு

(தெஹ்ரான்)

ஈரானின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பழமைவாத நீதிபதிகளுக்கும்இடையிலானமுரண்பாட்டை அடுத்து பாராளுமன்ற மறுமலர்ச்சி சபாநயகர் வெஷிர் ஹரோபி பாராளுமன்றத்திலிருந்துவெளி நடப்புச் செய்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கைது தொடர்பான விடயத்திற்கு சுமுகமான தீர்வுகாணும் வரை பாராளுமன்ற கூட்டத் தொடர்களுக்குத்தான் தலைமைதாங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

290 உறுபினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருக்கு ஆதரவாக வெளிநடப்புச் செய்துள்ளனர்.

நீதிபதி ஒருவரை அவமதித்தார்! என்றகுற்றச்சாட்டின் பேரிலேலே பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-5)

### பாதுகாப்பு படையில் இணையும்

## முதலாவதுஇத்தாலியக்குழு ஆப்கானை அடைந்தது

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள சர்வதேச பாதுகாப்புப் படையில் இணைந்து கொள்வதற்காக முதலாவது இத்தாலியக் குழு நேற்று ஆப்கானிஸ்தான் சென்றடைந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் சென்றுள்ள இத் தூதுக் குழுவில்11 இராணுவ அதிகாரிகளும் தகவல் பரிமாற்ற தொழில்நுட்ப நிபுணர்களும் அடங்கியுள்ளதாக இத்தாலியாவின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, மேலும் 10 அதிகாரிகளைக் கொண்ட இரண்டாவது குழு இன்றுஆப்கானிஸ்தான் செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(உ-7)

## தமிழ் நாடு இடைத் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில்அடுத்தமாதம் நடைபெற இருந்த சைதாபேட்டை, வாணியம் பாடி இடைத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆண்டிப்பட்டி மற்றும் சைதாப் பேட்டை வாணியம் பாடி போன்ற தொகுதிகளுக்கு அடுத்தமாதம தேர்தல் நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

சைதாப்பேட்டை, வாணியம் பாடி தொகுதிகளில் வாக்காளர் இடாப்புக்களில் தில்லு முல்லுக்கள் இடம் பெற்றுள்ளன என்று பல கட்சிகளாலும் புகார் செய்யப்பட்டதை அடுத்து தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தியது.

இதன்விளைவாக குறிப்பிட்ட இரு தொகுதிகளிலும் தேர்தல் அடுத்த மாதம் நடத்த முடியாதென்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்திற்குத் திருப்தி தரும் வகையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னரே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் என்று தேர்தல் ஆணைய செயலர் கே.ஆர்.பிரசாத் தெரிவித்தார். (து)

## குவைத் யுத்த விமானம் விபத்தில் சேதம்

(கட்டார்)

குவைத் நாட்டின் யுத்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்துள்ளது.

விமானத்தை ஓட்டிச் சென்ற விமானி பராசூட் மூலம் பாய்ந்ததில் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டார்.

வழமையான பயிற்சி இடம் பெற்ற வேளையிலே விமானம் விபத்துக்குள்ளானது என்றும் இதற்கு இயந்திர கோளாறே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## மாடிக் கட்டடத்தில் தீ ஆவணங்கள் எரிந்து நாசம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்தில் அரச மாடிக் கட்டடம் ஒன்று தீப் பிடித்து எரிந்துள்ளது.

14 மாடி அரசுக்கட்டடமான இதில் இருந்த பயங்கரவாதிகள் தொடர்பானதும் தீவிர வாதிகள் தொடர்பானதுமான ஆவணங்கள் தீக்கிரையாகியுள்ளன வென்று தெரிவிக்கப்படுகிறது.

முக்கியமாக பாகிஸ்தான் தடைவிதித்த பயங்கரவாத அமைப்புகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களே தீக்கிரையாகியுள்ளன. (து)

### பட்டிப்பொங்கலன்று

## காளை அடக்கலில் 70பேர் காயம்

(மதுரை)

பட்டிப்பொங்கலையொட்டி மதுரையில் நடந்த ஜல்லிக் கட்டு காளை விளையாட்டில் 70பேருக்கு காயமேற்பட்டதுடன் இதில்3 பேரின்உடல் நிலை கவலைக்கிடமாகஉள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 400 காளைகள் பங்குபற்றிய ஜல்லிக் கட்டை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர். (து)

### குடியரசு தினத்தைக் குழப்ப

## திட்டமிட்ட குழுவை பொலிஸ்மடக்கிப்பிடித்தது

(புதுடில்லி)

குடியரசு தினக் கொண்டாட்டங்களை குழப்புவதற்கு திட்டம் போட்ட தீவிரவாதக் குழுவை டில்லிப் பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட லக்ஷ்றிஇதாய்பா இயக்கத்தைச் சேர்ந்த 4 உறுப்பினர்களே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 35 இலட்சம் ரூபா பணமும் 8 கிலோ வெடி பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (து)

# விளையாட்டு செய்திகள்

### சுசந்திகாமீது

## சுமத்தப்பட்ட குற்றங்கள் விரைவில் வாபஸ்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல ஓட்ட வீராங்கனைசுசந்திகா ஜெயசிங்க மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு வாபஸ் பெறவுள்ளது.

அவுஸ்ரேலியாவில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்டு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்த சுசந்திகா மீது முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் அவதூறுகளை சுமத்தியிருந்தார்.

அத்துடன் அவருக்குரிய விளையாட்டுப் பயிற்சிகளையும் தடை செய்திருந்தார்.

ஆனால் தற்பொழுது புதிய அரசாங்கம் சுசந்திகாவுக்கு மீண்டும் பயிற்சி வழங்க முன் வந்துள்ளது.

இதனால் 2004ம்ஆண்டு எதென்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் இலங்கை கலந்து கொள்ளும் வாய்ப்பும் உண்டென எதிர்பார்க்கப் படுகிறது.

(இ)

## 3வது டெஸ்ட் போட்டி இலங்கை அணியிடம் சிம்பாவே தோற்றது

(கொழும்பு)

இலங்கை சிம்பாவே அணிகளுக்கு இடையே நடைபெற்ற 3வது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 315 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

காலியில் இடம் பெற்றஇவ் இறுதி டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸ்சில் துடுப்பெடுத்தாடியஇலங்கை அணி418 ஓட்டங்களையும் 2வது இனிங்ஸ்சில் 2விக்கெட்இழப்பிற்கு 212 ஓட்டங்களையும் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது சிம்பாவே அணி முதல் இனிங்ஸ்சில் 236 ஓட்டங்களையும் 2வது இனிங்சில் 79 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 315 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இம் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் 30விக்கெட்டுகளை வீழ்த்திய முரளிதரன் ஆட்டத் தொடர் நாயகனாகவும் ஆட்ட நாயகனாக இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியாவும் தெரிவு செய்யப்பட்டனர் இம்மூன்று டெஸ்ட் வெற்றியின் ஊடாகஇலங்கை அணி தொடர்ச்சியாக 8 டெஸ்ட் போட்டிகளில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

(உ- 10)

## காட்சிக் கரப்பந்தாட்ட போட்டிகள்

(சுண்டுக்குளி)

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட காட்சிக்கரப்பந்தாட்டபோட்டிகள் இரண்டு கடந்தஞாயிற்றுக்கிழமை மாலை கோப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக ஆடுகளத்தில் சமாச செயலாளர் மனோகரன் வவா தலைமையில் நடைபெற்றது.

1-வதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர்கழக அணி அதனை எதிர்த்தாடிய விக்னேஸ்வரா கழக அணியை 3:1 என்ற செற் கணக்கில் 25:20, 21:25, 25:22, 25:23, என்ற புள்ளிகள் அடிப்படையில் பலத்த போட்டியின்பின் வென்றது.

2-வதாக இடம் பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகஅணி அதனை எதிர்த்தாடிய கே. கே. எஸ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 3 நேர் செற்களில் 25:22. 25:18, 25:16 என்ற புள்ளிகள அடிப்படையில் வெகு இலகுவாக வெற்றி ஈட்டியது. (உ-110)

## டென்னிஸ் போட்டிகள்

(கொழும்பு)

சர்வதேச உள் நாட்டு வீரர்கள் பங்கேற்கும் டென்னிஸ் போட்டிகள் கொழும்பில் நடை பெற்று வருகின்றன.

சர்வதேச டென்னிஸ்கழகம் மற்றும் இலங்கை டென்னிஸ் அஸோஸியேசன் இணைந்து நடத்தும் இம் மாபெரும் தொடர் போட்டி 14ஆம் திகதிதொடக்கம்நடைபெற்று வரு கின்றது.

(உ- 10)


கட்டைவேலி - நெல்லியடி ப நோ கூ சங்கம்
புலமையாளர் அறிமுகமும்
புத்தகக் கண்காட்சியும்
புலமைப்பரிசில்வழங்கலும்

27-01-2002 இல் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் தவத்திரு தனிநாயகம் அடிகளார், மௌன தவ முனிவர் பொ. கைலாசபதி, பேராசிரியர் க. கைலாசபதி ஆகிய புலமையாளர்களை அறிமுகம் செய்தும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கியும் கௌரவிக்க உள்ளோம்.

மேற்படி நிகழ்வின் அங்கமாக புத்தகக் கண்காட்சி ஒன்றும் இடம்பெறும். இக்காட்சியில் தமது ஆக்கங்களை அறிமுகம் செய்ய விரும்புவோர் தமது ஆக்கங்களில் ஐந்து பிரதிகளை எமக்கு அனுப்பி வைப்பின் அதற்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

தலைவர்
கட். நெல். ப. நோ. கூ.
கரவெட்டி. சங்கம் (கி-3282)

அச்சம் உடையாருக்(கு)
அரணில்லை ஆங்கில் லை
பொச்சாப் புடையார்க்கு
நன்கு
குறள்

## வலம்புரி

### புதிய சாதனை

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வராக திரு.கந்தையன் அவர்கள் நேற்று பதவி ஏற்றுள்ளார்.

மாநகர சபைக்கான தேர்தல் நடைபெற்று 4 ஆண்டுகளுக்குள் நான்காவது முதல்வராகக் கந்தையன் பதவியேற்றிருப்பது இலங்கையின் வரலாற்றில் புதியதும் புதுமையுமாகும்.

1995 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக்கைப்பற்றிய படையினர் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தையும், விடுதலை உணர்வையும் மழுங்கடிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டனர். அதன் ஒரு திட்டமே 1997 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலாகும். மக்கள் இடம் பெயர்ந்து அல்லல் பட்ட நேரத்தில் இத்தகையதொரு தேர்தலை நடத்துவது தமிழர்களின் விடுதலை உணர்வை குலைக்கும் நோக்குடன் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் அன்று உணர்ந்திருந்தனர். அதன் காரணமாக அன்றைய உள்ளூராட்சித்தேர்தலை அவர்கள் விரும்பவில்லை.

ஆனால் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் அன்னியப்பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உள்ளூராட்சித் தேர்தலில் யோகேஸ்வரனின் மனைவி திருமதி சறோஜினி யோகேஸ்வரனுக்கே உண்டெனத் தீர்மானித்து தமது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தனர். இதனை அவர் ஏற்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள தேர்தலில போட்டியிடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக கூட்டணியினர் பொய் கூறினர். அந்தப் பொய்யைநம்பியே சறோஜினி தேர்தலில் போட்டியிட்டார்.

அன்று கூட்டணி உரைத்த பொய்யே திரு. கந்தையனை நான்காவது யாழ் முதல்வராக ஆக்கியுள்ளது.

ஒரு தேர்தல் முடிவில் நான்காவது முதல்வா பதவியேற்றிருப்பது புதிய சாதனை என்றே கூற வேண்டும்.

எதுவாயினும் புதிய முதல்வராக பதவியேற்றுள்ள கந்தையன் இன்னல்கள் வந்தபோதெல்லாம் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தார் என்பதும் கொழும்பில் குடியிருக்காத கூட்டணி உறுப்பினர் என்பதும் இங்கு நோக்கற்பாலது.

# சுதேசிக் கொள்கைகள் தனி மனிதன் ஆன்மீகம்

## சமயம் பற்றிய சுவாமி விவேகானந்தர் கருத்து

சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி மனிதனோ தலையாய முக்கியத்துவம் உடையவன். சமயம், கல்வி, சமுதாயம் ஆகிய துறைகளில் அவர் மனிதன், ஆண்மை மனிதனை உருவாக்குதல் ஆகிய வற்றுக்கு முதலிடம் கொடுத்தார். நாட்டை உருவாக்கும் அனைத்துப் பணிகளிலும் நாம் இதற்கே பேரிடம் தரவேண்டும். அவர் கூறினார். மனிதர்கள், மனிதர்கள் தான் வேண்டும். மற்றவை அனைத்தும் தானே தயாராகி விடும். முதலில் மனிதர்கள் தான் வேண்டும் நல்ல மனிதர்கள் தகுதி உள்ள மனிதர்கள் உயர்ந்த மனிதர்கள் வேண்டும் மனிதன் வாழ்வின்மையம்.

தலையாய தேவை!

சமுதாய, அரசியல் அமைப்புக்கள் அனைத்தின் அடிப்படைமனிதர்களின் நற்குணங்களே எந்த தேசமும் அதன் மக்கள் ஆட்சி மன்றம் இந்தச் சட்டத்தையோ அந்தச் சட்டத்தையோ போடுவதால் மகிமை பெற்றுவிடாது அதன் குடிமக்கள் மகத்தானவர்களாகவும், நல்லவர்களாகவும் இருப்பதால் தான் ஒரு தேசம் பெருமை பெறுகின்றது. உலகின் அனைத்துச் செல்வங்களையும் விட மனிதன் அதிக மதிப்புள்ளவன் நாட்டுக்காக தன்னுடையவை அனைத்தையும் தியாகம்' செய்யும் மனிதர்கள் முதுகெலும்பு வரை மனப்பூர்வமான மனிதர்கள் உருவாகும் போதுதான் பாரதம் ஒவ்வொரு துறையிலும் மகத்தானதாக மாறும்.

சுவாமிஜியின் தீர்க்க தரிசனத்தில் நம்பிக்கை, எச்சரிக்கை இரண்டுமே காணப்படுகின்றன. இரண்டையுமே நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நாம் காணும் பொருளாதார வளம், தேசத்தின் முன்னேற்றம் என்பவை உண்மையிலேயே நல்லவைதானா? சாதாரண மனிதனின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது செல்வ வளம் மனிதனுக்குள் இருக்கும் மிருகத்தையே வெளியே கொண்டு வருகின்றது. சுவாமிஜி முக்கியத்துவம் கொடுத்த மனிதனின் ஆன்மீக இயல்பு நற்குணம், செய்திகளில் எப்போதாவதுஅரிதாகவே காணப்படுகின்றது.

ஆன்மீக வாரத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

''உயர்த்தப்படும்'' பாமரர் பாமரர் மக்களை உயர்த்தும் உயர் வர்க்கத்தினர் இரண்டு பேர் விஷயத்திலும் இதுவே உண்மை.

ஆன்மாவே தலையாயது

மனித குணத்தின் உயர் அம்சங்களைப் பேணாமல் பொருள் வளத்தை மட்டும் வெறிகொண்டு தேடுதல் மிக ஆபத்தானது இதனை நாம் கவனிக்க வேண்டும்.

''சட்டமும் அரசும் கட்சிகளும் வளர்ச்சிப் பாதையில் இடை நிலைகளே அவையே இறுதி லட்சியங்கள் ஆகிவிடமாட்டா சட்டம் ஒன்றும் அடிப்படையானது அல்ல. நல்லொழுக்கமும் தூய்மையுமே பலம் தரும் பாராளுமன்றம் ஒரு சட்டம் போட்டு மனிதனை நல்லவனாக மாற்றிவிட முடியாது ஆகவே தான் அரசியலை விடச் சமயம் ஆழ்ந்த முக்கியத்துவம் உடையது சமயமே அனைத்து மனிதர்களின் இதயப் பகுதியைத் தொடுவது மேன்மைக்கும், நற்குணத்துக்கும் தோற்றுவாய் சமயம் தான், சமயம் பிரச்சினையின் வேர் வரை சென்று நன்னடத்தையின் அடிப்படையைத் தொடுகின்றது'' என்று சுவாமிஜி கூறுகின்றார்.

சுவாமிஜிக்கு மனித முயற்சிகளில் தலையாயது சமயமே! மனிதனுக்குள் ஏற்கனவே ஒழிந்து கிடக்கும் தெய்வத் தன்மையை வெளிக் கொண்டு வருவதே சமயம் தெய்வத் தன்மை என்பது சத்தியம் தூய்மை, தைரியம், ஈகை, ஞானம், அன்பு, பிறர்க்கெனத் தியாகம் புரிதல் ஆகியவற்றின் பூரண நிலையாகும் இவற்றை அனைத்து மனிதர்களிடத்திலும் வளர்ப்பதே அமைதியை உண்டாக்கி ஒற்றுமையை ஏற்படுத்தி உலகில் நல்லெண்ணத்தை உருவாக்கும். சுவாமிஜி கூறுகையில்.

''பாரதத்தைப் பொறுத்த வரை ஒற்றுமை என்பது சிதறிக்கிடக்கும் ஆன்மீகச் சக்திகளை ஒன்று திரட்டுவதே. பாரத தேசம் என்பது ஒரே ஆன்மீக இசைக்குத் தாளம் போடும் இதயங்களை ஒன்றிணைப்பதே'' என்றார்.

சமயமே பாரதத்தின் முதுகெலும்பு

நாம் இன்று சென்று கொண்டிருப்பது தவறான பாதை இதை உணர்ந்தவர் போல் சுவாமிஜி நம்மை எச்சரிக்கின்றார்.

இரக்கம் ஆகிய குணங்களை இழந்த தனி நபரோ குழுவோ நொறுங்கி அழிவதுதிண்ணம். இவர்கள் தன்னுடன் சேர்ந்து பிறருக்கும் தீமை செய்வர்.

உண்மையான மக்களாட்சி

குடிமக்களின் தரம்,பலம், ஞானம் இவற்றில் இருந்தே ஒரு ஜனநாயக அரசும் பலம் பெறும்.பெரும் எண்ணிக்கையில் அறிவற்ற மக்கள், கொந்தளித்துப்போன மக்கள், தவறான வழியில் செல்லும்வெறியர்களால் ஒன்றும்நடக்காது. மக்களாட்சி பற்றி சுவாமிஜி கூறிய கருத்துக்களை நாம் கவனிப்போம்.மக்களை 'மக்களே உயர்த்தும் புதுவழி வேலை செய்ய நாள்பிடிக்கும் மக்களுக்குக் கல்வி தந்து தம் தேவைகளை அவர்கள் தாமே புரிந்து கொண்டு தீர்ப்பதில் நாம் நம் முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டும். நற்குணங்களை உருவாக்கும் கல்வியே உடனடித்தேவை' சுவாமி விவேகானந்தர் 'விஞ்ஞானக்கல்வியை, ஐரோப்பிய

### சாயி அருளமுதம்



எல்லா மதங்களும்அடிப்படையான ஒருகட்டுப்பாட்டைப் போதிக்கின்றன. சிறு இன்பங்களை நாடுவதைத் தவிர்த்து அகங்காரத்தை அகற்ற வேண்டுமென்பதே அதுவாகும்.இறைவனின்மகிமையினால் மனிதன்தன்னை நிரப்பிக் கொள்ள வேண்டுமெனவும், அகந்தையென்னும் சிறுமையை ஒழிக்க வேண்டுமெனவும்ஒவ்வொரு சமயமும் போதிக்கின்றது. உயர்வான குறிக்கோளை நாடி, விடுதலை அடையும் பொருட்டு, பற்றின்மை, பகுத்தறிவு ஆகியவற்றின் முறைகளில் சமயம் அவனுக்குப் பயிற்சியளிக்கிறது. எல்லா இதயங்களும் தனியொரு இறைவனாலேயே செயற்படுத்தப்படுகின்றன என்பதையும், அந்தஒரேயொரு தெய்வத்தையேஎல்லா மதங்களும் போற்றுகின்றன என்பதையும், பல்வேறு மொழிகளில் இறைவனைக் குறிக்கும் எல்லாப்பதங்களும், கடவுளெனமனிதனால் கற்பனை செய்யப்படும் எல்லா உருவங்களும் அந்தத் தனியொரு தெய்வத்தையே குறிக்கின்றன என்பதையும் நம்புங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

### சுவாமி சாஸ்த்ரானந்தர்

சத்தியம்

சத்தியத்தின் இன்னொரு பெயர் தான் வன் முறை இன்மை என்பது.வாய்மையே வெல்லும்,சத்யமேவ ஜயதே என்ற நம் லட்சியவாசகம் வெறும் பேச்சளவில் நின்றுவிடாமல் நமக்கு நல்ல நினைவூட்டி,சக்திகொடுத்து,தேசிய வாழ்வின் அனைத்துத்தளங்களிலும் செயல்படுவதாக அமைய வேண்டும்.அரசியல், பன்னாட்டுறவு, வணிகம், தினப்படி சமூகஉறவு அனைத்திலும் சத்தியம் செயல்பட வேண்டும்.

வன்முறை இன்மை என்ற முக்கிய நற்குணம் நம் தேச வாழ்விலும், சிந்தனையிலும் பரவவேண்டும்.இது தனிமனிதனின் தற்காப்புக்கும் தேசத்தின் தற்காப்புக்கும் விரோதம் ஆகாது. சில சமயம் சுறுசுறுப்புக்கும் வன்முறைக்கும் வேறுபாடு காண்பது கடினம் ஆகி விடுகின்றது. தற்காப்புக்கான போர், குழந்தையைத் திருத்த அதனைக் கட்டாயப் படுத்தும் பெற்றோர் - இப்படிப்பட்ட தர்மசங்கடங்களால் இந்த அடிப்படைச் சத்தியமான அஹிம்சையை நாம் கைவிட முடியாது.

இன்று 'வற்புறுத்துதல்' என்பது 'வன்முறை'என்றாகிவிட்டது.பந்த், ஹர்த்தால், ஸ்டிரைக் என்பவை,போராட்டம்,வெளிநடப்பு, ஆர்ப்பாட்டம், கலவரம், கதவடைப்பு ஆகியவற்றை நம் சமுதாயம், ஏற்றுக்கொண்டு விடும் நிலை வந்து விட்டது. இவற்றைத் 'தவிர்க்கமுடியாத தீமைகள்' என்று நாம் ஏற்கிறோம். நம் அரசியல் கட்சிகளும்இவற்றை வளர்க்கின்றன. சமாதானப் பேச்சு ஆக்க பூர்வமான கருத்துப்பரிமாற்றம் ஆகியவைஅரிதாகிவிட்டன.இவை மக்களின் எழுச்சியைக் குறிக்கமாட்டா!.

உண்மையான பலத்தின் அடையாளம் மன உறுதி,தீவிரமாக நற்குணங்களைப் பற்றி நிற்றல், எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சாத தைரியம்ஆகியவையே. தீமையை எதிர்ப்பதில் பெரும் பொறுமை காட்டவேண்டும். சக்தியுடன் ஆனால் அமைதியாக வேலை செய்ய வேண்டும். இரக்கம் வேண்டும். பழிவாங்கும் போக்கு கூடாது.சுயக்கட்டுப்பாடு, ஈகைக்குணம், அன்பு அறிவைநம்ஆன்மீகத் தூய்மை இவற்றால் மேன்மைப்படுத்த வேண்டும் என்கிறார்.

தியாகமும் சேவையும்

சுவாமிஜி கூறியதியாகமும், சேவையும் நம் தேசிய லட்சியங்கள். இந்தத் திசையில் நாட்டை நெறிப்படுத்தினால் மற்றவை தம்மைத் தாமே கவனித்துக்கொள்ளும், தியாகம் என்றால் மேலான ஒன்றைப் பெறுவதற்கே கீழானதைத் தியாகம் செய்வதே ஆகும். ஆன்மீகத்தியாகம் புரிய மிகவும் தைரியம் வேண்டும்.பீரங்கியை எதிர்நோக்குவதை விட அதிக தைரியம் வேண்டும்.

'அலெக்ஸாண்டர் பாரதம் வந்தபோது ஒரு பிச்சைக்காரத் துறவியின் தைரியத்தைப்பார்த்து துறவின், ஆன்மீகத்தின் பலத்தைப் புரிந்து கொண்டார். மனிதன் என்றும் மரணமற்ற ஆத்மா என்றறியும் பலமே உண்மையான பலம்.தியாகம் இன்றி இதயம் பிறர்க்கென நெகிழாது. இதயத்தால் தூண்டப்பட்டு நீ பிறர்க்கென உன் உயிரையே கொடுத்து விட்டாலும் நல்லதுதான்'.

நம் கொள்கைகள், அரசியல் திட்டங்கள்,கல்வி,சமயம் ஆகிய அனைத்தும் நமக்கு ஆன்ம பலம், தியாக உணர்வு இவற்றை அளிப்பதாகவே அமைய வேண்டும். நம்பிக்கை,சக்தி, பிரக்ஞை, தெய்வீகம் இவற்றை மனிதனுள் தட்டி எழுப்ப அவை உதவ வேண்டும்.பிற மனிதர்கட்கும் நாட்டுக்கும் எனத்தன்னுடையவை அனைத்தையும் தியாகம் செய்பவர்களைப் பயிற்றுவிப்பதே வாழ்வின் மையக் கருத்து.

'பாரதம் ஊனுடம்பின் பலத்தால் அல்ல,ஆன்ம சக்தியால் தான் உயர்ந்தெழும். அழிவுச் செயல்களால் அல்ல! ஆக்கச்செயல்களால், அமைதியால், அன்பால் பாரதம் உயிர்த்துஎழும்!புராதனமான நம் பாரத அன்னை மறுபடியும் விழித்தெழுந்து தன் அரியணை மீது அமர்ந்திருக்கிறாள்.அவள புத்துயிர்பெற்று முன்பு எப்போதும்இருந்ததை விட அதிகபுகழுடன் திகழ்கிறாள்.இக்காட்சி என் கண் முன் தெரிகின்றது. சாந்தியும்

(5ஆம் பக்கம் பார்க்க)

# சுவாமி விவேகானந்தர் ஆன்மீக எழுச்சி விழா - 2002

நாள்:- இன்று (2002-01-17) வியாழக்கிழமை மாலை 3.00 மணி
இடம்:- நல்லூர் துர்க்கா மணி மண்டபம்
தலைவர்:- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
(ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம்)

**நிகழ்ச்சிகள்:-**

★ சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஊர்வலமாக
★ கொண்டுவரப்படும்
★ மங்கள விளக்கேற்றல்:- எஸ்.குணராசா
★ இறை வணக்கம்:- செல்வி ஸ்ரீ.தாட்சாயனி
★ வரவேற்புரை:- திரு எஸ்.சிவமோகன்
★ தலைமையுரை:-

ஆன்மீகப் பேருரைகள்:-

★ திரு இ.த.விக்னராஜா (நீதிபதி யாழ்மாவட்டம்)
★ விகடகவி மு.திருநாவுக்கரசு
★ செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

★ **சிறப்பு நிகழ்ச்சிகள்:-**

கவியரங்கம்
''விடியலைத்தேடி.........
தலைவர்:- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்
பங்கேற்போர்:- திரு.த.ஜெசீதன்
திரு.எஸ்.ஐங்கரன்
திரு.கு.புரந்தரன்
திரு.எஸ்.தெய்வேந்திரம்
தெய்வத்தமிழ் செம்மல் நவநீதன்
கிராமத்துக் குயில் ஓவியா றெஜீபன்

★ சுழலும் சொற்போர்:-
தலைவர்.சைவப் புலவர் கந்த சத்தியதாசன் (ஆசிரியர்,சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)
பங்கேற்போர்: ★ சைவப்புலவர் த.நித்தியதசிதரன்
★ அருண்மொழிச் செல்வன் அ.ஜெசீதன்
★ தெய்வத்தமிழ்செம்மல் நவநீதன்
★ திரு.செ.கவிதரன்
★ திரு.க.விஜிந்தன்
★ திரு.த.நகுலன்
★ திரு.த.பிரதீப்

சபையோர் அரங்கம்
தலைவர் இ.த.விக்னராஜா (நீதிபதி யாழ்மாவட்டம்)
நன்றியுரை:- திரு.கு.நக்கீரன்
இறைவணக்கம்

ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள்
-யாழ்ப்பாணம்-

(4244)


ஆன்மீக எழுச்சி விழா சிறப்புற வாழத்துவோர்
அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.54 பெரியகடை வீதி ~ யாழ்ப்பாணம்

## யாத்திரிகர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமணி ஸ்ரீ ஐயப்பதாசன், சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் சபரிமலை புனித யாத்திரை சென்ற 126பக்தர்களும் சபரிமலையில் 18ம் படியேறி நெய்யபிசேகம் செய்து மகர ஜோதி தரிசனம் கண்டு நாடுதிரும்பியுள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6.30மணி முதல் தம்பையா சத்திரம் விநாயகர் ஆலயத்தில் விஷேட பஜனையும் 18ம்படி பூஜையும் இடம்பெற உள்ளது. (ந)



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த பரீட்சை ஆணையாளர் ஏ.ஆர்.எம் அமரக்கோன் யாழ் கல்வித்திணைகளத்திற்கு வருகை தந்தபோது அவரை மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ்.சிவராசா மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும் வலயக்கல்விப்பணிப்பாளர்கள் சகிதம் பரீட்சை ஆணையாளர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: கோபி)

# க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று தடவை தோற்றலாம்!

### பல்கலைக்கழக அனுமதியும் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு மூன்றாவது தடவையாகவும் மாணவர்கள் தோற்ற முடியும் எனவும் அவ்வாறு மூன்றாவது தடவை தோற்றுவதால் அவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்படமாட்டாது எனவும் யாழ் வந்துள்ள பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இரண்டு தடவைகள் மட்டுமே உயர்தரப்பரீட்சைக்கு தோற்ற முடியும் என பரவலாக பேசப்பட்டதால் மாணவர்களிடையே ஏற்பட்ட குழப்ப நிலையை பரீட்சை ஆணையாளரின் இவ்வறிவித்தல் மூலம் நீக்கியுள்ளது (ந19)

## ஸ்ரீ.சு.கட்சி ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கண்டித்து புளொட் அமைப்பு நாளை ஏற்பாடு செய்துள்ள பூரண ஹர்த்தாலுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பு தனது பூரண ஆதரவை வழங்குவதாக அமைப்பின் பிரதிநிதி தேவகுலநாயகம் தெரிவித்துள்ளார். (ந)

## வேலணையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலணைப்பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வேலணைப்பிரதேச சபைத் தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நாளை பகல் 10மணிக்கு சபையின் தலைமை பணிமனையில் நடைபெறும். இக்கலந்துரையாடலுக்கு சனசமூக நிலையங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர், பொருளாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

**இன்று...**


அந் நிகழ்வு உலகவாழ் தமிழர்களால் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்று இடம்பெறும் பொங்குதமிழ் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அதிகாரபூர்வ இணையத்தளம் (www. pongu tamil. com) ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்படும். (ந)

## ஒருவருடத்திற்கு..

மேலும் இரு இராஜதந்திரிகளின் சேவைகளைப் பெற்று வலுப்படுத்தப்பட்டுள்ளது. சீனாவில் இருந்து அழைக்கப்பட்ட இலங்கை தூதுவரின் தலைமையில் பற்றியக்கார, ஜோன்குணரத்தின ஆகிய ராஜதந்திரிகளும் கலந்துகொள்வர். (ந)

# பாப்பரசரின் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை



(யாழ்பபாணம)

பாப்பரசரின் இலங்கைப்பிரதிநிதி மேதகு. தேமஸ் யங் செங் ராம் ஆண்டகை மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார் இவருடன் கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு. விஜன்னி பொ்னான்டோ, திருமலை மட்டு நகர் மாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் மறைமாவட்ட ஆயர்மேதகு இராயப்பு ஜோசப் ஆகியோர் வருகிறார்கள்

மேதகு யாங் செங் ராம் ஆண்டகை நாளை காலை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட பின் பிற்பகல் நான்கு மணிக்கு பண்டத்தரிப்பு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கும் இளவாலை கன்னியாஸ்திரிமடத்துக்கும் விஜயம் செய்வார். (வ)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

Z புள்ளித்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3.30மணிக்கு யாழ்ப்பாணம் டீ.எம்.ஐ கல்வி நிறுவனத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வாழ்த்துகின்றோம்

கத்தோலிக்க கலை இலக்கியவட்டத்தினரின்
தேம்பாவணி இசைக்குழுவினால்

A/L 2004
வர்த்தகப் பிரிவு
ACC. திரு.பாலவாசன்

## அறியத்தருகின்றேன்

ஆன்மீக எழுச்சி வாரத்தினை வரவேற்கும் அதேவேளை இதற்கு அழைப்பு விடுத்த இளைஞர்களுக்கும் எனக்கும் தற்போது எந்த வித தொடர்பும் இல்லை என்று தெரியப்படுத்துகின்றேன்.

ஆன்மீக எழுச்சி வாரத்தினை வரவேற்கும் அதேவேளை இதற்கு அழைப்பு விடுத்த இளைஞர்களுக்கும் எனக்கும் தற்போது எந்த வித தொடர்பும் இல்லை என்று தெரியப்படுத்துகின்றேன்.

தி.சத்தியேந்திரா
சங்கானை மடம், சங்கானை

4241

---

## வாழ்த்துகின்றோம்

கத்தோலிக்க கலை இலக்கியவட்டத்தினரின்
தேம்பாவணி இசைக்குழுவினால்
ஜோசப்பாலாவின் பாடலுக்கு ஜெரோமின்
இசையமைப்பில் வெளியிடப்பட்ட

**தேவகானம்**

ஒலிநாடா வெளியீட்டை
வாழ்த்துகின்றோம்

கிடைக்கும் இடங்கள்
- புனித அந்தோனியார் ஆலயம், மானிப்பாய்
- அருள்ஆச்சிரமம், யாழ்.

தோமஸ் இளைஞர் மன்றம்
பாண்டியன் தாழ்வு

C/3287

---

## A/L 2004
### வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| ACC. | திரு.பாலவாசன் |
| ECO. | திரு.மோகன் |
| B.ST. | திரு.யசோ |
| LOG. | திரு.மனோகரன் |

19/01/02 -Sat- 8 AM

**BECON**
யாழ்

4193

---

## விற்பனைக்கு

LANKA ASHOK LEYLAND, COMET SUPER லொறி விற்பனைக்குண்டு 21 திங்கள் முதல் 23புதன் வரை பார்வையிடலாம்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
விளம்பர இலக்கம் 230
மே/பா, வலம்புரி
15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

4242

---

## மரண அறிவித்தல்
### பரமு முத்துக்குமாரு

பரமு முத்துக்குமாரு வடிவேல் அவர்கள் 16.01.2002 (புதன்) அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற முத்துக்குமாரு லெட்சுமி தம்பதிகளின் மகனும் காலம்சென்ற மாணிக்கவல்லியின் பாசமிகு கணவரும் ஞானேஸ்வரி, பாலச்சந்திரன், கலாநிதி, சிவகுமார் (முகாமையாளர் கிராமியவங்கி கோண்டாவில் ப.தெ.வ.அ.கூட்டுறவு சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற சிவகுரு (C.O), குருநமசிவாயம், பாமதி, பராசத்தி (ஆசிரியை மகேஸ்வரி வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், காலம்சென்ற சசிகலா மற்றும் சசீலன் (ஆசிரியர் பயிற்சிகலாசாலை பலாலி) சசிகரன் (வலம்புரி நிறுவனம்), சசிகாந், காஞ்சனா, மைதிலி பகீரதன், (கனடா). வேதகிருஸ்வரன், அனுராதா, சசீலா, பாதுஷன், பாரதன், சிவதர்சன், பபீசன், ஜெனோசா, ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் ஆடியபாதம் வீதியில் உள்ள அன்னாரின் ஞானபவனம் இல்லத்தில் 17.01.2002 (வியாழன்) இன்று நடைபெற்று. பிற்பகல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

தகவல்
சி.சசிகரன் (பேரன்)

C/3291

---

## பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம்

தரம் 7 முதல் O/L வரை
- ✻ விஞ்ஞானம்
- ✻ தமிழ்
- ✻ கணிதம்
- ✻ வர்த்தகம்

அனுமதிகளைஉடன் பெற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:-
இல. 8 பிளச்சர்லேன்
சுண்டுக்குளி

C/3286

---

## விக்னா கல்வி நிறுவனம்

52,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

பிரிவு - 1

**O/L Day Class**

(8.30-2.00)

28 வருட சேவை

ஆரம்பம் 21-01-2002 காலை 8.30மணி

- ✻இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே
- ✻கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்
- ✻விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்

C/3289

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.